24

24

ஜான் தார்க்

அல்லது

அருளம்மாளின்
மகா அதிசய சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-3 JAN 194
MADRAS

இஃது

சங். P. S. இஞ்ஞாசிநாதர் சுவாமிகளால்
இயற்றப்பட்டது.

3348

" Mais Dieu le premier servi "

—*Adage of St. Joan of Arc.*

"கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்"

—அர்ச். ஜான்தார்க்கின் மூதுரை.

3508

1939

தஞ்சாவூர் தொன்போஸ்கோ பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

விலை அணு 4.

சங். P. S. இஞ்ஞாசிநாதர் சுவாமியாரால் இயற்றப் பட்ட தர்க்கப் புஸ்தகங்களும் சரித்திரங்களும்.

	ரூ அ. ப.
1. ஒரே திருச்சபை அல்லது புரோட் டெஸ்டாண்டாரைக்கொண்டே புரோட்டெஸ் டாண்டு மதங்கள் பொய் யென்று எண்பித்தல்	1—0—0
2. சுரூப வணக்கம் விக்கிரகாராதனை யல்ல வென்று புரோட்டெஸ்டாண்டாரைக் கொண் டே எண்பித்தல்	0—5—0
3. நோட்டிசு அல்லது லுத்தர் கள்ளத் தீர்க்கத்தரிசி யென்று அவர் போதனையைக் கொண்டே எண்பித்தல்	0—2—3
4. ஓர் பெரிய புரோட்டெஸ்டாண்டு கூத்து (திருச்சினுப்பள்ளி)	0—4—0
5. மர்த்தீன் லுத்தர் ஜீவிய சரித்திரம் ...	0—6—6
6. ஓர் மகா அதிசய காட்சி அல்லது பன்னிரண்டு வெற்றிமுடி அணிந்த வேதம் கத்தோலிக் திருச்சபை ஒன்றுதானென்று புரோட்டெஸ்டாண்டாரைக் கொண்டே எண் பித்தல்	0—9—0
7. உனக்கு ஏது பைபிள் புரோட்டெஸ் டாண்டானே அல்லது பைபிள் பாரம்பரை மேல் கட்டப்பட்டிருக்கிறதென்று புரோட்டெஸ் டாண்டாரைக்கொண்டே எண்பித்தல் ...	0—7—0
8. ஓர் அண்டப்பொய்	0—1—0

ஜான் தார்க்

அல்லது

அருளம்மாளின்

மகா அதிசய சரித்திரம்

"**Mais Dieu le premier servi**"

—*Adage of St. Joan of Arc.*

"கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்":

—அர்ச். ஜான்தார்க்கின் முதுரை.

3398

923.144

1939

தஞ்சாவூர் தொன்போஸ்கோ பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது

Nihil obstat.

T. A. Rajamanikam.

Censor Deputatus.

15—8—1939.

Imprimatur:

+ Peter Francis,

Bishop of Kumbakonam.

OFFICE OF REGISTRAR OF BOOKS
-3 JAN 1940
MADRAS

முகவுரை

ஒவ்வொரு தேசத்திலும் பற்பல சிறந்த வீர சூரர்கள் தோன்றி, மகா அதிசய பராக்கிரமச் செயல்களைச் செய்தார்களென்று அந்தந்த தேசத்து சரித்திர புஸ்தகங்களிலே நாம் வாசிக்கிறோம். ஆனால் இவைகள் யாவும் ஜான் தார்க்கின் சரித்திரத்துக்கு இணையாகா. ஏனென்றால் மற்றவர்கள் தங்கள் தங்கள் சுயபராக்கிரமத்தால் இவைகளைச் செய்தார்கள். இவளோ கடவுள் நாமத்தால் செய்தாள். மெய்யாகவே இவளுடைய சரித்திரத்தால் மனிதர்களுக்கு ஏராளமான நன்மை வரக்கூடும்.

"நல்லாரைப் பார்ப்பதும் நன்று—நலமிக்க
நல்லார் சொல் கேட்பதும் நன்று"

என்று ஓர் சாதாரணமான மனிதனைப் பார்த்து ஓர் புலவர் பாடினால், கடவுளால் அனுப்பப்பட்ட ஒருவரைப்பார்த்து எவ்வளவு பெருமையாய்ப் பேச வேண்டியது!

"உன் மரபைச் சொல்ல ஒரு கோடி நாள் பிடிக்கும்"

என்னும் நீதி மொழியானது இச்சரித்திரத்துக்குப் பொருந்துமென்று இதை வாசிப்போர் யாவரும் சொல்வார்கள்.

அல்லாமலும் இச்சரித்திரமானது எவ்வளவு ஆச்சரியமுள்ளதென்றால், ஐரோப்பா கண்டத்தில் இவளைப் பற்றி அறியாத தேசம் கிடையாது. உதாரணமாக, கோரிஸ் என்னும் மகா சரித்திராசிரியர் ஜெர்மன் தேசத்

தாரா யிருந்தாலும் (M. Guide Goerres), இந்த பிராஞ்சு மங்கையின் சரித்திரத்தை எழுதுவதற்கு ஐரோப்பா கண்டத்திலுள்ள எல்லா புஸ்தக சாலைகளை மாத்திரம் ஆராய்ந்து பார்த்தது போதாமல், பிராஞ்சு தேசத்து பட்டணங்களிலே இவளைப் பற்றிய கையெழுத்துப் பிரதிகள், பாரம்பரைச் சரிதைகள், சிறு சிறு சரித்திரங்கள் முதலியவைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி அத்தேசமெங்கும் சுற்றித்திரிந்தார்.

மெய்யாகவே "குடத்தில் அடங்குமோ கங்கை" என்னும் பழமொழிபோல், இவளைப்பற்றிய சரித்திர புஸ்தகங்கள் ஐரோப்பா கண்டத்தில் ஏராளம்.

ஆனால் அகண்ட நமது இந்தியா தேசத்திலோ இவளைப் பற்றிப் படித்தவர்கள்கூட சரியாய் அறியார்கள். இதை நிவர்த்திசெய்யவே இப்புஸ்தகத்தை இயற்றினேன்.

மற்ற காலங்களைவிட இக்காலத்தில் இச்சிறு புஸ்தகம் மகா அவசியமென்று நான்சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் நாஸ்திகம், துன்மார்க்கம், கீழ்ப்படியாமை, இராஜ துரோகம், தேவதுரோகம் முதலிய பற்பல மகா பெரிய அக்கிரமங்கள் உலகமெங்கும் தலைவிரித்தாடும் இக்காலத்திலே இவ்வித சரித்திரம்தான் தக்க மருந்து என்று நான் சொல்லவேண்டுமோ?

அல்லாமலும் "தட்டத்தட்ட எள், கொட்டக்கொட்டக் கொட்ட கேழ்வரகு" என்னும் சுலோகச் சொற்படி, இதை வாசிக்க வாசிக்க சன்மார்க்கம், இராஜபக்தி, தேச

பக்தி, தெய்வபக்தி முதலிய மேலான புண்ணியங்கள் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஜான்தார்க்கின் மகா உன்னதமான முதுரையென்னவென்றால்: "கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்" செய்ய வேண்டுமென்பது. (a)

இம்முதுரையானது:

"ஒருவனென்றே தெய்வத்தை வணங்கவேண்டும்.
உத்தமனாய் பூமிதனிலிருக்க வேண்டும்"

என்று மகா அகஸ்தியர் பாடியபாட்டுக்கு ஒத்திருக்கிறதென்று யாவரும் சொல்வார்கள்.

இப்படியே உலகத்திலுள்ள சகல வேதங்களும் போதிக்கிற இப்போதகத்தைத்தான் ஜான்தார்க்கம்மாள் மேலான விதமாய் அனுசரித்து, அதற்காகவே தன் உயிரைக் கொடுத்தாள்.

ஆகையால் இவளுடைய புண்ணியங்களை நாமெல்லோரும் பின்பற்றுவது நமது கடமையாகும்.

P. S. Ignatius
Catholic Priest
Bishop's House
Kumbakonam.

(a) "Mais Dieu le premier servi"

இச்சரித்திரம் அடியிற்கண்ட புஸ்தகங்களிலிருந்து பொறுக்கி இயற்றப்பட்டது

---

(1) Blessed Jeanne d' Arc.

by C. M. Antony

(2) Jeanne d' Arc

by Gabriel Hanotaux.

(3) Jeanne d' Arc.

by G. Michelet.

(4) Jeanne d' Arc
by H. Debout.



அர்ச். ஜான்தார்க் ஆடுகளை மேய்த்தல்.

ஜான்தார்க் அம்மாள்

அல்லது

அருளம்மாளின்

மகா அதிசய சரித்திரம்

ஆரம்பம்.

15-ம் நூற்றாண்டிலே கீர்த்தி பெற்ற பிராஞ்சு தேசத்தைஆண்டுவந்த ராஜகுடும்பத்திலும், அதை நடத்தி வந்த மந்திரிகளிடத்திலும் வெகு ஒழுங்கீனங்களும் தவறு தல்களும், 50—60வருஷகாலமாய் நடந்துகொண்டு வந்தன. எவ்வளவு ஒழுங்கீனமென்றால்: ஓர் அரசன் அத்தேசத்தை தன் சத்துராதிகளாகிய இங்கிலீஷ்காரருக்கு விற்று விட்டான். இதனால் அத்தேசத்து ஜனங்களிலேயே பெருத்த கலகங்களும் குழப்பங்களும் உண்டாயின.

இதைக்கண்ட இங்கிலாந்து தேசத்து அரசன் 6–ம் என்றி என்பவனும், பிராஞ்சு தேசத்தின் ஓர் பாகமாகிய பர்கண்டி நாட்டு அரசனும் ஆக இருவரும் சேர்ந்து கொண்டு, பிராஞ்சு தேசத்தில் முக்கால்வாசிப் பங்கைப் பிடித்துக் கொண்டு, தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள். 6-ம் என்றி என்னும் இங்கிலீஷ் அரசன் தான்பிடித்த பிராஞ்சு தேசத்தை ஆளும்படிக்கு தனக்குப்பதிலாக பெட்வோர்ட் பிரபுவை (Duke of Bedford) நியமித்தான்

(Regent). பாரிஸ், ரெயிம்ஸ் முதலிய பெரிய பட்டணங்களெல்லாம் இவன் கைவசம் இருந்தன.

பிரான்சு தேசத்துத்தெற்கேயுள்ள சிற்சில சிறு பட்டணங்கள்தான் டாபின் என்னப்பட்ட பிரான்சு அரசன் 7-ம் சார்ல்ஸுக்குச் சொந்தமாயிருந்தன. (Dauphin Charles VII). ஆகையால் இவரை "பூர்க் பட்டணத்து அரசன்" (King of Bourges) என்று எதிரிகள் பரிகாசமாய்ச் சொல்லுவார்கள். இவரும் தேசத்தை விட்டு ஓடிப்போக எண்ணிக்கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் 7-ம் சார்ல்ஸுக்கு சொந்தமான ஆர்லியன்ஸ் பட்டணத்தைப்பிடிக்கும்படியாக இங்கிலீஷ்காரர்கள் பெருத்த சேனையோடு அதை முற்றுகை போட்டார்கள். இப்பட்டணத்தைப்பிடித்துவிட்டால், இவ்வரசனுடைய இராட்சியம் முடிந்து விட்டதென்று சொல்லலாம். அப்போது பிராஞ்சுதேசமே இராது. அவ்வளவு பெரிய ஆபத்து இத்தேசத்துக்கும் இதைஆளும் 7-ம் சார்ல்ஸுக்கும் வந்துவிட்டது.

இவ்வளவு பெரிய ஆபத்துக்குத்தப்பித்துக்கொள்ள வேண்டுமானல், எதிரிகளோடு கடுமையான போர் புரிய வேண்டும். இதற்கு ஏராளமான பணம் மகா அவசரம். ஆனல் அரசனுக்கோ எங்கும் கடன். இவருடைய பொக்கிஷப் பெட்டியிலே நாலு கிரவுண் அதாவது சுமார் ரூ 10 தான் இருந்தது. மகா அவசியமான வீட்டு ஜாமான்களைக் கூட வாங்க இவரிடம் விதி இல்லை.

இதுவுமல்லாமல் தேசத்திலுள்ள ஜனங்களிடத்திலே பெரிய குழப்பங்கள் உண்டாயின. தேசமெங்கும் சுற்றித் திரியும் போர்வீரர்கள் குடியானவர்களுடைய சொத்துகளை யும் விளைவுகளையும் கொள்ளை அடித்து நாசப்படுத்தின படியால், குடியானவர்கள் தங்கள் தொழிலை விட்டுவிட்டு, திருடர்களானார்கள்; பகற் கொள்ளை அடித்தார்கள். ஜனங் களைப்பிடித்து அநியாயம் செய்து, அவர்கள் உயிருக்காகப் பணம் கேட்டார்கள். கொடாவிட்டால் கொலை செய்தார் கள். ஜனங்கள் குழிதோண்டி தங்கள் ஆடு மாடுகளையும் ஒளித்து வைத்தார்கள். ஆகையால் தேசமெங்கும் ஜனங் களிடத்திலே ஒரே திகில் உண்டாயிருந்தது.

"தாலி அறுத்த ஊரிலே தலைக்குத்தலை நாட்டாண் மை" என்னும்பழமொழிபோல சீரும் சிறப்பும் அமைந்த பிராஞ்சு தேசத்திலே இவ்வித கலகங்கள் நடந்தன. இவை களுக்கெல்லாம் காரணம் அரசனும் அவனுடைய மந்திரிக ளுமே. ஆகையால் "பயிர் பார்க்காமல் கெட்டது, மாடு மேய்க்காமல் கெட்டது" என்னும் பழமொழி இவர்களுக் குப் பூரணமாய்ப்பொருந்தும்.

"நல்லரசில்லையேல்
நாடு காடாகும்" என்று சொல்லவும் வேண்டுமோ?

தங்கள் தேசத்து அரசன் இவ்வித தின்மைகளினின்று தங்களைக்காப்பாற்ற முடியாதென்று ஜனங்கள்கண்டு கட வுள்தான் தங்களுக்குகதியென்று அவரை நோக்கி ஒரே வாய் மொழியாய்க் கூப்பிட்டார்கள். முக்கியமாய் இக்காலத் திலே பிராஞ்சுக்காரர்களுக்குத் தங்கள்தேசத்திலுள்ள

லூர்துமலையானது பெரிய திருயாத்திரை ஸ்தலமாயிருப்பதுபோல அக்காலத்திலுள்ள பிராஞ்சுக்காரர்களுக்கு பெரிய திருயாத்திரைஸ்தலமாயிருந்த பூயி என்னும் இடத்துக்குப் போய் (Puy in Valay), அங்கேயுள்ள தேவமாதாவைப்பார்த்து, தங்கள் தேசத்துக்காக மகா பக்தியாய் வேண்டிக் கொண்டார்கள் (a)

இவர்கள் கேட்டபடியே கடவுள் இங்கிலீஷ்காரர்கள் கையிலிருந்து பிராஞ்சுதேசத்தை மீட்க ஓர் இரட்சகரை அனுப்பத்திருவுளமானுர்.

ஆனுல் இவ்விரட்சகர் ஓர் பெரிய அரசனல்ல, அல்லது சகல வித்தைகளையுங்கற்ற ஓர் தளகர்த்தனல்ல, அல்லது நானுவித கலைகளைக்கற்ற ஓர் பண்டிதனல்ல. அ, ஆ, இ, ஈ, என்கிற எழுத்துகளை முதலாய் அறியாத ஓர் சிறு பெண்ணை, பட்டிக்காட்டில் பிறந்த ஓர் பெண்ணைத்தான் கடவுள் இப்பிரமாண்டமான வேலைக்குத் தெரிந்துகொண்டார்.

இவள்பேர் ஜான்தார்க். இம்மாதரசின் மகா அதிசயமான செயல்களைப்பற்றித்தான் இச்சிறுபுஸ்தகத்தில் எழுதப்போகிறேன்.

இதைப்பற்றி ஓர் மகாவிசேஷமான காரியம் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அதென்னவென்றுல்: பிராஞ்சு

(a) 1429-ம் வூ நடந்த ஜுபிலி காலத்தில் இரண்டு லட்சம் திருயாத்திரைக்காரர்கள் இந்தத் திருஸ்தலத்தில் கூடினுர்கள்.

தேசத்தைஇரட்சிப்பதற்கு லோரேன்நாட்டில், ஓக்மரத் தோப்பு என்னும் வனத்தில் ஓர் பெண்உதிப்பாளென்று பீட் (Venerable Bede), மெர்லின், மரியம்மாள் (Marie d' Arragon) முதலியபற்பல அர்ச்சியசிஷ்டவர்கள் அனேக வருஷங்களுக்குமுன் தீர்க்கத்தரிசனமாய் அறிவித்திருந் தார்கள். ஆகையால் சேசுநாதர்சாமியுடைய வருகைக்கு இஸ்ராயேல் ஜனங்கள் 4000வருஷகாலமாய்க்காத்திருந்தது போல பிராஞ்சுக்காரர்யாவரும் இந்த அற்புத மாதின்வரு கைக்குக் காத்திருந்தார்கள். இத்தீர்க்கத்தரிசனம் பிராஞ்சு தேசத்தில் மாத்திரமல்ல, இங்கிலாந்துமுதலிய மற்றதேசங் களிலும் பரவி இருந்தது.

மெய்யாகவே ஜான்தார்க்கின் சரித்திரத்தைவாசித் துப்பார்த்தால், "இங்கிலீஷ்காரர் கையிலிருந்து பிராஞ்சு தேசத்தை மீட்கும் பிரமாண்டமான வேலையைக் கடவுள் தாமே தமதுபேரில் சுமந்துகொண்டாரென்றும், இதற்காக உலக சரித்திரத்திலேயே எங்கும் காணப்படாத ஓர் மகா பெரிய புதுமையை அவர் செய்தாரென்றும், இது மெய் யென்பதாக ஐரோப்பா கண்டமுழுவதும் சாட்சிசொல்லு மென்றும்" தெபு முதலிய சாஸ்திரிகளோடு நாம்சொல்ல வேண்டும். (a)

(a) Jeanne d 'Arc by H. Debout II Vol p 311

1-ம் அதிகாரம்.

ஜான்தார்க்கின் பிறப்பும் வாலிப காலமும்.

பிராஞ்சு தேசத்திலே லோரேன் நாட்டில் ஓக் மரம் அடர்ந்த காட்டில் மியுஸ் ஆற்றின் கரையில் தோன்ரெமி என்னும் சிற்றூரிலே (a) ஜான்தார்க் அல்லது அருளம்மாள் என்னும் பேர்கொண்ட மாதரசி (b) கி. பி. 1412-ம் ௵ ஜனவரி௴ 6-ம் ௳ பிறந்தாள்.

இவள் தகப்பன் பெயர் யாகப்பன் (c) தாய்பெயர் எலிசபெத்ரோமே (d). இவளுக்கு யாகப்பன், அருளப்பன், இராயப்பன் என்ற மூன்று சகோதரர்களும், கத்தரினாள் என்ற ஓர் சகோதரியும் இருந்தார்கள்.

ஜான்தார்க் பிறந்த நாள் இராத்திரி அவ்வூரில் ஓர் மகா விசேஷம் நடந்தது. ஜனங்கள் யாவரும் ஒரே நேரத்

(a) Domremy
(b) Jeanne d' Arc
(c) Jacques Dave
(d) Elisabeth Romée—ரோமாபுரிக்குத் திருயாத்திரை செய்தவர்களுக்கு ரோமே (Romée) என்னும் பட்டப்பெயர் கொடுப்பது அக்காலத்தில், அதாவது மத்திபகாலத்தில் வழக்கம். ஆகையால் இவள் 1425-ம் ௵த்திய ஜூபிலிக்கு ரோமாபுரிக்குத் திருயாத்திரை போயிருக்க வேண்டியது.

தில் நடுச்சாமத்திலே திடீரென்று எழுந்திருந்து, சந்தோஷம் கொண்டாருடிர்கள். கதவைத்திறந்து வெளியே வந்து, வானத்தை நோக்கிப் பார்த்தார்கள். ஒன்றும் காணவில்லை. கோழிகள் எழுந்திருந்து, இறக்கைகளை அடித்துக் கொண்டு கூவின. இப்படி இரண்டுமணி நேரம் இருந்தன. பிற்பாடு தான் இதன் அர்த்தத்தை ஜனங்கள் கண்டார்கள்.

இவளுடைய பெற்றோர்கள் ஆஸ்திக்காரர்களல்ல. ஆனால் சில நிலங்களும், ஆட்டுமாட்டு மந்தைகளும் இவர்களுக்கு இருந்தன. இவர்களுடைய வீடு கோவிலுக்கு அருகாமையில் இருந்தது. யாகப்பன் என்பவர் ஓர் காலத்தில் தோன்ரெமி என்னும் சிற்றூரிலே ஓர்வித நாட்டாண்மைக்காரராயிருந்தார்.

இவளுடைய தாய் தந்தையர்கள் இவளுக்குக் கல்வி கற்பிக்கவில்லை. இவளுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. ஆனால் தையல்தைப்பதிலும், நூல்நூற்பதிலும் இவள் மகா திறமையுடையவள். வீட்டு வேலைகளை மகா சுறுசுறுப்பாய்ச் செய்வாள். சில நேரங்களில் தன் ஆடுமாடுகளை வயல்களுக்கு ஓட்டிக்கொண்டு போவாள்.

இயற்கையிலேயே இவள் அச்சமற்ற நெஞ்சமுள்ளவள். ஒருவரும் அறியாமல் அடிக்கடி கோவிலுக்குப் போய் கடவுளை வணங்கிக் கொண்டிருப்பாள். ஆயினும் பிள்ளைகளோடு ஓடி ஆடிக் களிப்பதில் ஆவல் உள்ளவள். இவள் பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருக்கும்போதே, திடீரென அவர்களை விட்டுவிட்டு கோவிலுக்குப்போய் ஜெபம் செய்வாள். "அத்தன் பாதம் எத்தினமும் நினைத்திடு"

என்னும் பொன் மொழிகளைத் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டிருப்பாள்.

கோவில் மணி அடிக்கும் ஓசையைக் கேட்க இவள் ஆனந்தங்கொள்வாள். எங்கே இருந்தாலும், அவ்வோசையைக் கேட்டவுடனே முழங்காலிலிருந்து, மகா பக்தியோடு ஜெபம் செய்வாள். பூசைகாணத் தவற மாட்டாள். "ஆலயசேவை சீலமுடன்செய்" என்னும் மேலான ஞானத்தைக் கைக் கொண்டாள். இப்படியே:

> "சிந்தையில் போற்று
> சிறப்புறப் போற்று
> முறைப்படி போற்று
> நித்தமும் போற்று"

என்னும் கொள்கைப்படி இவள் கடவுளோடு வாசஞ் செய்தாளென்று சொல்லலாம்.

இவளுடைய இருதயம் எவ்வளவு சுத்தமாயிருந்த தென்றால் ஆகாயத்துப் பறவைகளும் இவள் கையில் உட்கார்ந்து சாப்பிட்டு, சந்தோஷம் கொண்டாடும்.

இவள் வீட்டுக் கருகாமையில் ஓக் என்னும் மரங்கள் அடர்ந்த பெரியஓர் காடு (Oak-Wood) இருந்தது. முன் காலத்தில் அம்மரங்களிலே மினிகள் (Fairies) குடியிருந்து, கூத்தாடிக் கொண்டிருந்ததாக ஜனங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஓர் மரத்தடியில் ஊரிலுள்ள சிறு பையன்களும் பெண்களும் வெயில் காலத்திலும், திருநாள்

களிலும் கூடி, கூத்தாடி, விருந்து சாப்பிட்டு, சந்தோஷம் கொண்டாடுவது வழக்கமா யிருந்தது. ஜான்தார்க் அம்மணியும் இவர்களோடு கூடிக்கொண்டு விளையாடுவாள்.

இக்காலத்திலே அதாவது 1425-ம் ௵ தேசமெங்கும் சண்டைகளும் சச்சரவுகளும் நடந்துகொண்டிருந்த காலத்தில் அந்தந்த நாடுகளில் பற்பல கள்ளர் கூட்டங்கள் கிளம்பி, எங்கும் தின்மைகளைச் செய்தார்கள். அவர்களில் ஒருவன் என்றி என்பவன் தோன்ரெமி ஊரிலே புகுந்து, ஊரைக்கொள்ளை அடித்து, பற்பல விதமாய் ஜனங்களை இம்சைசெய்து, ஏராளமான ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு போனான். ஊரார் இவனை எதிர்த்து, சண்டை போட சக்தியற்றவர்களாயிருந்தார்கள். ஆனால் பார்த்தலேமி என்னும் ஓர் படைத்தலைவன் உதவியால் ஷை ஊரார்கள் தங்கள் ஆடு மாடுகளை மறித்து, மீட்டு, தங்கள் ஊருக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். அப்போது ஊரிலுள்ள யாவரும் முக்கியமாய் சிறுவர்கள் சந்தோஷப்பெருக்கத்தால் ஓடி ஆடிக்குதித்தார்கள். 13 வயதுள்ள ஜான்தார்க்கும் இவர்களோடு சந்தோஷம் கொண்டாடினாள்.

இப்படியே ஜான்தார்க் அம்மாள் பூவும் பிஞ்சுமாயிருக்கும்போதே, நலத்திலும், குலத்திலும், நண்ணியபலத்திலும், தெய்வபக்தியிலும் மேன்மை அடைந்து வந்தாள். கள்ளமற்ற உள்ளம் இவளிடம் பூரணமாய் பிரகாசித்தது. ஊரார்யாவரும் இப்பெண்ணைப்பொன்னைப்போல போற்றி வந்தார்கள். "நல்லவள் தெய்வமென்று நாடெங்கும் கையெடுக்கும்" என்கிற பழமொழி இவளிடம் நிறைவேறிற்றென்று சொல்லலாம்.

2-ம் அதிகாரம்

ஜான் தார்க்கின் தெய்வ அழைப்பு

1424ம் ௵ அதாவது ஜான் தார்க் அம்மாளுக்கு பதிமூன்று வயது நடக்கும்போது, ஓர் மகா அதிசயமான சம்பவம் நடந்தது. அதென்னவென்றால்: வெயில் காலத்தில் ஒரு நாள் சூரியன் உச்சியிலிருக்கும் போது, புஷ்பங்கள் நிறைந்தத் தன் தோட்டத்தில் இவள் நின்றுகொண்டிருக்கையில் திடீரென ஓர் குரலோசையைக் கேட்டாள். உடனே சூரியனை விட மகாப் பிரகாசமான ஓர் ஒளி தோன்றிற்று. இவ்வொளிக்கு நடுவே அர்ச். மிக்கேல் சம்மனசு நின்றார். இவரைச் சுற்றி அநேக சம்மனசுகள் புடை சூழ்ந்திருந்தார்கள். அப்போது இவளுக்கு பயம் உண்டாயிற்று. "நீ நல்லவளாயிரு, கோவிலுக்கு அடிக்கடி போ" என்று அர்ச். மிக்கேல் சம்மனசு சொன்ன பிறகு, காட்சி மறைந்தது.

கொஞ்ச நாளுக்குப் பிறகு திரும்பவும் அந்த காட்சி தோன்றிற்று. "அர்ச். கத்திரினாளும் அர்ச். மர்கரித்தாளும் உனக்கு காட்சி கொடுப்பார்கள். அவர்களுடைய புத்திமதிகளை நீ கேட்க வேண்டும். நீ செய்ய வேண்டியது யாவற்றையும் அவர்கள் சொல்வார்கள். உன்னை நடத்த கடவுள் அவர்களைத்தான் நியமித்திருக்கிறார். அவர்கள் உனக்கு சொல்வதை நீ நம்பு. இதுதான் கடவுளுடைய கட்டளை" என்று அர்ச். மிக்கேல் சம்மனசு சொல்லிற்று.

இன்னும் கொஞ்ச நாளுக்குப்பிறகு, அதாவது ஜான் தார்க்குக்குப்பயம் தெளிந்து, காட்சியின் பேரில் இவளுக்கு நம்பிக்கை உண்டான பிறகு, இவள் செய்ய வேண்டிய வேலையை அர்ச். மிக்கேல் சம்மனசு திட்டமாய் வெளிப்படுத்தினது. “ இங்கிலீஷ்காரரால் முற்றுகை போடப்பட்ட ஆர்லியன்ஸ் பட்டணத்தை நீ அவர்கள் கையிலிருந்து மீட்க வேண்டும். பிரான்சு ராஜன் சார்ல்ஸ் என்பவரை ரெயிம்ஸ் பட்டணத்தில் முடி சூட்ட வேண்டும். இது கடவுள் உனக்குக் கொடுக்கும் கட்டளை” என்று அர்ச். மிக்கேல் சம்மனசு இவளுக்குச் சொல்லிற்று.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே ஜான் தார்க்குக்குத் திகில் உண்டாயிற்று. இவள் சம்மனசுக்குச் சொன்னதாவது “ நான் ஓர் ஏழைப்பெண். எனக்குக் குதிரை ஏறத் தெரியாது. வாளும் ஈட்டியும் பிடிக்கத்தெரியாது. இப்படியிருக்க மகா விவேகமுள்ள மந்திரியும் மிக்க தைரியமுள்ள போர் வீரனும் செய்ய முடியாத இந்த வேலையை எப்படி நான் செய்யக் கூடும்? ” என்று சொன்னாள்.

கடவுள் கொடுத்த இவ்வேலையைச் செய்யத்தான் வேண்டுமென்று சம்மனசு வற்புறுத்திச் சொன்னதற்கு இவள் அவரை நோக்கி “நான் உடுத்தியிருக்கும் உடுப்பைப் பாரும். ராட்டணம் சுற்றுகிற வேலையைத்தவிர வேறே வேலையைச் செய்யத்தெரியாத என் கைகளைப்பாரும்” என்று தான் கட்டியிருந்த உடுப்பைக் காண்பித்துத் தன் கைகளையும் நீட்டின வண்ணமாய் அழுது கொண்டு சொன்னாள்.

ஆனால் சம்மனசு "இது கடவுள் கட்டளை, இதை நீ செய்யத்தான் வேண்டு" மென்று சொல்லிற்று.

இப்படியே ஐந்து வருஷ காலமாக அர்ச். மிக்கேல் சம்மனசும், அர்ச். கத்தரினாளும், அர்ச். மர்கரித்தம்மாளும் இவளுக்குக் காட்சி கொடுத்து, இவள் தன் வேலையைச் சரியாய்ச் செய்யும்படி, தக்க ஆசையையும் தைரியத்தை யும் ஊட்டினார்கள். அவர்களோடு இவள் அடிக்கடி, சில வேளை நாள்தோறும் பேசிக்கொண்டிருப்பாள். இதனால் இவள் திடங்கொண்டு, தன்னால் யாதொன்றும் செய்ய முடியா தென்றும், கடவுள் மாத்திரம் யாவற்றையும்செய்ய வல்லவரென்றும் நன்றாய் அறிந்து கொண்டு, கடவுள் கொடுத்த இவ்வேலையைச் செய்யச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாள். "பசிக்குமுன் பத்தும்பறக்கும்" என்னும்பழமொழிப்படி, தெய்வ கட்டளைக்கு முன் இவளுக்கு இருந்த கஷ்டங்கள யாவும் ஓடிப்போய் விட்டன. இதற்குப்பிறகு இணையற்ற ராஜ விசுவாசமும் தேச பக்தியும் இவளிடம் உண்டாயின.

ஆனால் இவள் காலையில் பால் கறக்கும்போதாவது அல்லது மாலையில் ரொட்டி சுடும்போதாவது அல்லது கொட்டை நூற்கும்போதாவது அல்லது ஒக் மரத்தடியிலே விளையாடிக் கொண்டிருக்கும்போதாவது ஷை காட்சிகளை இவள் கண்டாளென்பதாக ஒருவருக்கும் தெரியாது. இவளும் தான் கண்ட காட்சிகளைப்பற்றி பிறருக்குத் தன் தாய்க்கு முதலாய் ஒருக்காலும் வெளிப்படுத்தவில்லை. இதினால் இவளுடைய மனோபலம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருந்திருக்கவேண்டியதென்று அறிந்துகொள்ளலாம்.

அல்லாமலும், தன் காட்சிகளைப்பற்றி இவள் பாவசங் கீர்த்தனத்தில் தன் ஆத்தும குருவிடம் சொல்லக்கூடா தென்று அர்ச். மிக்கேல் சம்மனசு சொல்லியிருக்கவேண்டி யது.

இச்சமயத்திலே இந்த மாதரசியின் தகப்பன் யாகப் பன் என்பவர் இவளைப்பற்றி ஓர் நாள் இராத்திரி கனவுகண் டார். அதென்னவென்றால்; இவள் போர்ச்சேவகர்களோடு சேர்ந்துகொண்டு தேசமெங்கும் சுற்றி வருவதாகக் கண் டார். இதைத் தன் பெண்சாதி, பிள்ளைகளுக்கும் வெளிப் படுத்தினர். ஜான்தார்க் என்பவள் கெட்ட பெண் பிள்ளைக ளோடு சேர்ந்துகொண்டு போர்ச் சேவகர்களுடன் துன் மார்க்கமாய் நடப்பாள் என்று விட்டார் யாவரும் இந்த கனவுக்கு அர்த்தம் கொடுத்தார்கள். அப்படி இவள் நடந் தால் இவளைத்தண்ணீரிலே அமிழ்த்திச் சாகடிக்க வேண்டு மென்று தகப்பன் தீர்மானித்தார்.

3-ம் அதிகாரம்

ஜான் தார்க் அரசனிடம் செல்லல்.

கடவுள் தனக்குக் கொடுத்த வேலையை சரிவர நடத்தும்படி அதற்கு வேண்டிய காரியங்களை ஜான் தார்க் அம்மாள் 1428 ம் ஷ நுணுநுணுக்கமாய் அறிந்தாள். பிரஞ்சுக்காரருக்குச சொந்தமான ஆர்லியன்ஸ் பட்டணத்தை இங்கிலீஷ்காரர்கள் முற்றுகை போட்டார்கள். அப்போது அர்ச். மிக்கேல் சம்மனசு இவளுக்குத் தரிசனையாகி, சொன்னதாவது: "நீ பிராஞ்சு தேசத்துக்குப் போய், இங்கிலீஷ்காரர்கள் முற்றுகை போட்டிருக்கும் ஆர்லியன்ஸ் பட்டணத்தை அவர்கள் கையிலிருந்து மீட்க வேண்டும். அதற்காக வோக்குலர் பட்டணத்து தளகர்த்தன் ராபர்ட் என்பவனிடம் (a) போ. நீ செய்ய வேண்டியவைகளை அவன் சொல்வான்" என்று சொன்னர்.

வோக்குலர் என்னும் பட்டணம் தோன்ரெமி ஊருக்கு அருகாமையில் இருந்தது. அதின் தளகர்த்தன் ராபர்ட் சிறு வயதுள்ளவனுயிருந்தாலும், திற மிக்க போர் வீரன். அரசியல் விஷயத்தில் மிகவும் மதிக்கப்பட்டவன். ஆனல் கெட்ட கிறிஸ்துவன். இவனிடம் போக அர்ச். மிக்கேல் சம்மனசு இவளுக்குக் கட்டளை யிட்டார்.

(a) Robert of Vaucouleurs.

இதற்கு ஓர் சந்தர்ப்பம் நேரிட்டது. அதெப்படியென்றால்: ஜான் தார்க்கின் சகோதரி வோக்குலர் பட்டணத்துக் கருகாமையிலுள்ள பூரி என்னும் கிராமத்திலுள்ள லாசார்த் என்பவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். லாசார்த் என்பவன் அப்போது தோன்ரெமிக்கு வந்திருந்தான். இவன் திரும்பியும் தன் ஊருக்குப் போகும்போது, ஜான்தார்க் தானும் இவனோடு கூட பூரிக்கு வருவதாகச் சொன்னாள். அப்படியே இருவரும் வழி நடந்து போகும்போது, இவள் சொன்னதாவது: "நான் இராஜகுமாரனைப் பார்க்கவேண்டும். அவருக்கு நான் முடி சூட்டி வைக்க வேண்டும். ஏனென்றால் அர்ச். மிக்கேல் சம்மனசு, அர்ச். கத்தரினாள், அர்ச். மர்கரித்தம்மாள் ஆக இம் மூவரும் அனேக விசை எனக்குத் தரிசனை கொடுத்தார்கள். இவ்வேலையைச் செய்ய கடவுள் பேரால் இவர்கள் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்கள். இதைச் செய்வது என் கடமை யாகும்" என்று லாசார்த்துக்குச் சொன்னாள்.

தன் காட்சிகளைப் பற்றி இவள் பிறத்தியாரிடம் சொன்னது இதுதான் முதல் விசையாகும்.

இவள் சொன்ன வார்த்தைகளைத் துவக்கத்தில் லாசார்த் என்பவன் நம்பாதிருந்தாலும், கடைசியாய் இவன் நம்பினான். ஏனென்றால் இச்சிறு மங்கை யிடத்தில் சீரிய இயல்பும், உயர்ந்த ஒழுக்கமும் உண்டென்று இவனுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் இவளை வோக்குலர் பட்டணத்திலுள்ள ராபர்ட் தளகர்த்தனிடம் கொண்டுபோய் விடுவதாக லாசார்த் உறுதி மொழி கொடுத்தான்.

இந்த வாக்கின்படியே 1428 ம் ஹு சேசுநாதர்சாமி மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாளன்று லாசார்த் என்பவன் ராபர்ட் இடம் இவளை அழைத்துக் கொண்டு போனான். இவள் ராபர்ட்டுக்குச் சொன்னதாவது "நான் கடவுள் நாமத்தால் இவ்விடம் வந்தேன். இராஜ குமாரன் யுத்தத்தை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்த வேண்டும். வருகிற வருஷம் தபசு காலத்தின் 4–ம் கிழமைக்குள்ளாக கடவுள் அவருக்கு உதவிப்பட்டாளம் அனுப்புவார். எதிரிகள் அனேகர் அவரோடு போர் புரிந்தாலும், நான் அவருக்கு இராஜ முடி சூட்டுவேன்" என்று மகா தைரியமாய்ச் சொன்னாள். ஆனால் இவள் என்ன சொன்ன போதிலும், ராபர்ட் நம்பவில்லை. அனேகர் இவளைப் பார்த்து நகைத்தார்கள். கடைசியாய் இவளைக்கன்னத்தில் அறைந்து, "உன் வீட்டுக்குக் கொண்டுபோ", வென்று ராபர்ட் லாசார்த்துக்குக் கோபத்தோடு சொன்னான்.

ஜான் தார்க் அம்மாள் மகா விசனத்தோடு தன் ஊருக்குத் திரும்பிப்போனாள். ஏமாற்றமடைந்தாலும் இவள் அவதைரியப்படவில்லை.

கொஞ்சகாலத்துக்குப்பிறகு அதாவது 1428 ம் ஹு சுவாமி பிறந்த திருநாளுக்குப் பிறகு, இவள் திரும்பியும் பூரி என்னும் ஊருக்குப் போக வேண்டியதாயிருந்தது. அப்போது வோக்குலர் பட்டணத்திலுள்ள கத்தரின் லரையே என்னும் ஓர் ஏழைக்குடியானவனின் வீட்டிலே சுமார் மூன்று வாரம் தங்கினாள். இவ்வீட்டுக்கு ராபர்ட் தளகர்த்தனும், பங்கு சாமியாரும் வந்து இவளோடு பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ராபர்ட் தளகர்த்

தனுடைய பட்டாளத்தான் ஒருவன் (Knight) இவ் வீட்டுக்கு வந்தான். இவன் பெயர் அருளப்பன் (Jean Nouillonpont) இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது இவள் சொன்னதாவது: "நான் ராபர்ட் தளகர்த்தனைப்பார்க்கவும் அவர் மூலமாக நான் இராஜாவிடம் போகவும் நான் இப்பட்டணத்துக்கு வந்தேன். ஆனால் ராபர்ட் என்னையும் என் வார்த்தைகளையும் மதிக்கவில்லை. ஆகிலும் தபசு காலத்து 4-ம் கிழமைக்குள்ளாக நான் இராஜனைப்பார்க்க வேண்டும். இங்கிருந்து அவர் இருக்கிற இடத்துக்கு முழங்காலிலேயே போகவேண்டியதாயிருந்தாலும், நான் அவரிடம் போக வேண்டும். பிராஞ்சு தேசத்தை இங்கிலீஷ்காரரிடமிருந்து மீட்க உலகத்திலே என்னை தவிர வேறே ஒருவரும் கிடையாது. எந்த இராஜாவும், எந்தப் பிரபுவும், ஸ்காட்லந்து தேசத்து ராஜகுமாரத்தியுங்கூட இவ்வேலையைச் செய்ய முடியவேமுடியாது. ஆகிலும் என் வீட்டுக்குப் போய் என் அருமைதாயாரோடு கொட்டை நூற்கத்தான் எனக்குப்பிரியம். கடவுள் இவ் வேலையைச் செய்ய எனக்குக் கட்டளையிட்டபடியால், இது என்கடமையாகும்" என்று மகா ஊக்கத்தோடும் மிக்கச்சாதுரியமாகவும் இம்மாது ஷை அருளப்பனுக்குச் சொன்னாள்.

இவளுடைய பேரறிவையும், அஞ்சாமையையும், ஊக்கத்தையும் கண்ட அருளப்பன் உடனே "நான் உன்னை இராஜாவிடம் அழைத்துக் கொண்டு போவேன்" என்று சொல்லி, இவளுடைய கையைப் பிடித்து, உறுதி மொழி கொடுத்தான். கடைசியாக ஜான் தார்க் அம்மாளை ராஜாவிடம் அனுப்ப ராபர்ட் என்பவன் தீர்மானம் செய்தான்.

ராபர்ட் தளகர்த்தனின் வீட்டுக்கு முன் மகா நேர்த்தியான ஏழு சண்டைக்குதிரைகள் நின்றன. பக்கத்தில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் நின்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களில் சிலர் “ இவளா நமது தேசத்தை இங்கிலீஷ்காரர் கையிலிருந்து மீட்கப் போகிறு” ளென்று நினைத்தார்கள். வேறு சிலர் “ பட்டிக் காட்டில் பிறந்த இந்த சிறு பெண் எப்படி இவ்வளவு பெரிய சண்டைக் குதிரையில் ஏறப் போகிறு” ளென்று சொன்னுர்கள். ஆனுல் அனேகர் இவளுடைய நடத்தையையும் பரிசுத்ததனத்தையும் கண்டு, இவள் கடவுளால் அனுப்பப் பட்ட ஓர் மாது என்று சொன்னுர்கள். இந்தக் கும்பலிலுள்ள சில பெண் பிள்ளைகள் அழுதுகொண்டு நின்ருர்கள். இப்படி யிருக்கும் போது,ஜான் தார்க் அம்மாள் போர்ச் சேவகர்கள் உடுத்திக் கொள்ளும் உடையை அணிந்து கொண்டு, குதிரை மேலேறி இன்னும் ஆறு போர் வீரர்களோடு ராஜக் குமாரன் இருக்கும் ஷினே என்னும் பட்டணத்துக்குப் புறப்பட்டாள்.

இப்பட்டணத்துக்கும் வோக்குலர் என்னும் பட்டணத்துக்கும் சுமார் 160 மைல் இருக்கும். நடுவே ஐந்து பெரிய ஆறுகள் உண்டு. நாலு பக்கமும் எதிரிகள் சூழ்ந்திருந்தார்கள். இவ்வழியாகதான் ஜான் தார்க் போக வேண்டும்.

போகும் போது இவள் சொன்னதாவது: “ கடவுள் கொடுத்த கட்டளையை நான் செய்யாதிருக்கலாமா? நமது தேசத்தை எதிரிகளிடமிருந்து மீட்க வேண்டுமென்று கடவுள் ஐந்து வருஷ காலமாக எனக்குக் கட்டளை யிட்டிருக்கிருர்” என்ருள்.

கடைசியாய் யாவரும் இராஜ குமாரன் 7-ம் சார்ல்ஸ் இருந்த ஷினோ பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது ஜான் தார்க் அம்மாளைப் பற்றி அரண்மனையில் ஓர் கூட்டம் கூடினது. இதில் குருப்பிரசாதிகள் மாத்திரம் இருந்தார்கள். இவர்கள் பற்பல கேள்விகளை அவளிடம் கேட்டார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லாமல், அவள் கேட்டதாவது: "நான் ராஜ குமாரரை நேராய்ப் பார்க்க வேண்டும். அவரிடத்தில் மாத்திரம் நான் சகலத்தையும் சொல்லுவேன். நான் இரண்டு வேலைகளை, அதாவது—ஆர்லியன்ஸ் பட்டணத்தை மீட்பது, ராஜ குமாரரை ரெயிம்ஸ் பட்டணத்தில் முடி சூட்டுவது—ஆக இவ்விரண்டையும் நான் செய்ய வேண்டியது" என்றாள்.

அதே சமயத்தில் இங்கிலீஷ் காரரால் முற்றுகையிடப்பட்ட ஆர்லியன்ஸ் பட்டணத்திலிருந்து சில போர்ச் சேவகர்கள் இராஜனைப் பார்ப்பதற்கு வெகு வேகமாய் வந்திறங்கினார்கள். ஆர்லியன்ஸ் பட்டணத்தை மீட்க ஒரு மாது வருகிறாளென்றும், அந்த அதிசய மாது ஷினோ பட்டணத்துக்கு வந்து விட்டாளா வென்றும், இராஜாவினிடம் கேட்க வந்தார்கள்.

கடைசியாய் அரசனை நேராய் கண்டு தரிசிக்க 1429-ம் ஸு மார்ச்சு மீ 10-ம் தேதி ஜான் தார்க்குக்கு உத்தரவு அளிக்கப் பட்டது.

அன்று சாயந்தரம் அரண்மனையிலே சுமார் நூறு விளக்குகளும் பந்தங்களும் எரிந்துக் கொண்டிருந்தன. ஏறக்குறைய முந்நூறு பிரபுக்களும் அதில் உட்கார்ந்து கொண்

டிருந்தார்கள். அரசனும் சாதாரண உடையை அணிந்து கொண்டு, அவர்களோடு இருந்தார். ஜான் தார்க் அம்மாள் இக்கும்பலுக்குள் பிரவேசித்து, நேராய் அரசனிடம் போய், அவருடைய முழங்கால்களைப் பிடித்துக் கொண்டு "இராஜ குமாரரே, கடவுள் உமக்கு நீடிய ஆயுளை அளிப்பாராக!" என்றாள். அதற்கு அரசன் "நானல்ல. இதோ தூர இருக்கிறாரே, அவர் தான் இராஜன்" என்று தடுத்துச் சொன்னார். அதற்கு இவள் "நீர் தான் இராஜக் குமாரன். உம்மைத் தவிர வேறொருவரும் இராஜ குமாரர் இல்லை. கடவுள் பேரால் இதைச் சொல்லுகிறேன்" என்றாள். இன்னும் இவள் சொன்னதாவது: "கருணை நிறைந்த இராஜ குமாரரே, என்பெயர் அருளாயி (Jeanne the maid) என் மூலமாய் கடவுள் உமக்கு அறிவிப்ப தென்ன வென்றால்: ரெயிம்ஸ் பட்டணத்தில் நீர் முடி சூட்டப் படுவீர். உலகத்தை ஆளும் கடவுள் பேரால் நீர் பிரான்ஸ் தேசத்து இராஜாவாக இருப்பீர்," என்றாள்.

அப்போது கூடி யிருந்த ஜனங்கள் யாவரும் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள். பிறகு, ஜான் தார்க் எழுந்து அரசனைத் தனியாய் அழைத்துப் போய், தான் கடவுளால் அனுப்பப் பட்டவளென்று அவருக்கு எண்பிக்க, ஓர் இரகசியத்தை அவருக்கு வெளிப் படுத்தினாள். அதென்ன வென்றால்:

7-ம் சார்ல்ஸ் என்றும் அரசன் தான் பிராஞ்சு தேச ராஜப் பட்டத்துக்குச் சுதந்தரவாளு அல்லவாவென்று மிகவும் சந்தேகம் கொண்டார். இதைப்பற்றி இவர் ஒருக்காலும் சந்தேகப்படவே வேண்டியதில்லை யென்றும், மெய்

யாகவே இவர் பிரான்சு தேசத்து அரசனென்றும் ஜான் தார்க் இப்போது மகா உறுதியுடன் சொன்னாள். ஆனால் இவ்விதமாய் தன் உள்ளத்தில் சந்தேகப் பட்டதைப்பற்றி இவர் ஒருக்காலும் மற்றவர்களுக்கு வாய்விட்டுச் சொல்ல வேயில்லை. ஆகையால் அரசனுடைய உள்ளத்தில் மாத்திரம் இருந்த இந்த நினைவை தேவ திருஷ்டியால் மாத்திரம் இந்த அதிசய மாது அறிந்திருக்க வேண்டுமென்று கண்டு அரசன் இவளை நம்பினார். கடலிலே விழுந்தவனுக்குக் கப்பல் அகப்பட்டது போல, இவருக்கு உதவி புரிய கடவுளே முன் வந்து நின்றார் என்று சொல்லவேண்டும்.

ஆகிலும் இவள் கடவுளால் அனுப்பப் பட்டவளா அல்லவா வென்று இன்னும் சந்தேகம் இருந்தது. சிலர் இவளை நம்பினார்கள். சிலர் நம்பவில்லை. இன்னும் சிலர் இவளை "மந்திரக்காரி" யென்றார்கள். ஆனால் சாதாரண ஜனங்கள் இவளை முழுதும் நம்பினார்கள். ஆகையால் ஆர்லியன்ஸ் பட்டணத்தை மீட்கும்படி இவளை அனுப்ப அரசன் தாமதம் செய்தார்.

கடைசியாய் இதைத்தீர விசாரிக்கும்படி புவாத்தியர் என்னும் பட்டணத்தில் (Poitiers) ஓர் கூட்டம் கூட்டப் பட்டது. இதில் பிரான்சு தேசத்திலுள்ள அநேக சிறந்த மேற்றிராணிமார்களும் வேத சாஸ்திரிகளும் மூன்று வாரமாகத் தர்க்கித்தார்கள். அநேக மகா நுட்பமான கேள்விகளையெல்லாம் இவளைக் கேட்டார்கள். அவைகள் யாவற்றிற்கும் மகா ஆச்சரியமான விதமாய் இவள் பதில் சொன்னாள். "நீ கடவுளால் அனுப்பப் பட்டவளென்று எண்பிக்க அவர் பேரால் ஓர் புதுமை செய். அப்போது தான் நாங்கள் நம்புவோம்" என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டார். அதற்கு

இவள் சொன்னதாவது: "புதுமை செய்ய நான் இங்கே வரவில்லை. எனக்குப் போர்ச் சேவகர்களைக் கொடுத்தால், ஆர்லியன்ஸ் பட்டணத்தை எதிரிகளிடமிருந்து மீட்பேன். அதுதான் நான் செய்யும் புதுமை. எனக்கு அ, ஆ, இ, ஈ. என்னும் எழுத்து முதலாய்த் தெரியாது. ஆனால் ஆர்லியன்ஸ் பட்டணத்தைப்பிடிப்பது, இராஜகுமாரரை ரெயிம்ஸ் பட்டணத்தில் முடி சூட்டுவது—ஆக இவ்விரண்டு காரியங்களையும் செய்யக் கடவுள் அனுப்பினாரென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்," என்று ஜான் ஆர்க் சொன்னாள்.

இவளுடைய அஞ்சாமையைப் பார்த்து கூட்டத்திலுள்ளவர்கள் யாவரும் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள்.

இச் சமயத்தில் இவளுடைய நடத்தையைப் பற்றி விசாரணை செய்ய இவள் பிறந்த தோன்ரெமி என்னும் ஊருக்குப் போன பிரான்ஸிஸ்கு சபை சந்நியாசிகள் திரும்பி வந்து இவளைப் பற்றி வெகு நேர்த்தியான அபிப்பிராயம் சொன்னார்கள்.

கடைசியாய் புவாத்தியர் பட்டணத்தில் கூடிய சங்கத்து நியாயாதிபதிகள் இவள் பேரிலே யாதொரு குற்றமும் குறையும் இல்லையென்பதாகத் தீர்மானம் சொன்னார்கள்.

அல்லாமலும் இவள் ஆண் உடையை உடுப்பது நியாயமா என்று அரசன் கேள்வி கேட்டபோது, போர் வீரர்களாகிய ஆண் மக்களோடு இவள் கலந்து சண்டை செய்ய வேண்டியிருப்பதால், இவள் அப்படிசெய்வது சரியென்று ஓர் மேற்றிராணியார் அவருக்குப் பதில் உரைத்தார்.

கடைசியாக 7-ம் சார்ல்ஸ் அரசன் ஆர்லியன்ஸ் பட்டணத்தை மீட்கும்படியாக பதினேழு வயதுள்ள ஜான் தார்க் அம்மாளைத் தன் தளகர்த்தனாக நியமித்தார்.

இதை இவள் கேட்டவுடனே புள்ளிமான் போல துள்ளிக் குதித்தாள். வெகு நாளாய்த் தான் கெஞ்சிக் கேட்ட காரியம் சித்தித்ததைப் பற்றி மிகவும் சந்தோஷப் பட்டாள்.

4-ம் அதிகாரம்

ஜான் தார்க் ஆர்லியன்சை மீட்டல்

ஆர்லியன்ஸ் என்னும் பட்டணம் லுவார் ஆற்றின் கரை மேல் கட்டப்பட்ட சிறந்த ஓர் நகரம். இதில் 30,000 பிரஞ்சிக்காரர்கள் அடைபட்டு இருந்தார்கள். இவர்களை நடத்தினவர் துனுவா என்னும் தளகர்த்தர். இப்போது இது மகா அபாயகரமான நிலைமையிலிருந்தது. ஏனென்றால் இங்கிலீஷ்காரர்கள் இப்பட்டணத்தைச் சுற்றி பெரிய பெரிய கோட்டைகளையும் மிக பலமான கட்டிடங்களையும் கட்டி இதை முற்றுகை போட்டார்கள். ஆகையால் இதிலுள்ள பிரஞ்சுக்காரர்கள் சாப்பாடில்லாமல் மிகவும் தவித்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால் எதிரிகள் சுமார் எட்டு மாத காலம் பட்டணத்தை முற்றுகை போட்டார்கள். இவர்கள் கூடிய சீக்கிரம் இதைப் பிடித்துக் கொள்வார்களென்று எல்லோரும் எண்ணி யிருந்தார்கள்.

இவ்வளவு ஆபத்துள்ள பட்டணத்தைத்தான் ஓர் சிறு பெண் எதிரிகளை முறியடித்துக் காப்பாற்றினுள். ஜான் தார்க் அம்மாளுக்கு ஓர் சிறு காவல் படையைக் கொடுத்தார்கள். அருளப்பன் என்பவன் (Jean d' Aulon) குதிரை வீரராகவும் (Squire), டிமெத்ன்டி புலோங்சி என்பவர்கள் போர் வீரராகவும் (Knights), ஜான் தார்க்கின் இரு

சகோதர்களாகிய அருளப்பனும் ராயப்பனும் உதவிஆளாகவும் சில போர்ச் சேவகர்கள் ஊழியக்காரர்களாகவும், பார்க்கெரல் என்பவர் (Jean Parquerel) ஆத்ம குருவாகவும் இவளுக்கு நியமிக்கப் பட்டார்கள்.

இராஜன் இவளுக்கு நேர்த்தியான ஓர் குதிரையைக் கொடுத்தார். அல்லாமலும் ஓர் பட்டாக்கத்தியையும் கொடுத்தார். ஆனல் இதைவேண்டாமென்று தள்ளிவிட்டு புயர்புவா பட்டணத்துக் கோவில் பீடத்தடியில் ஒளித்து வைக்கப்பட்ட ஓர் பட்டாக்கத்தி அங்கே இருக்கிறதென்று தேவதிருஷ்டியால் அறிந்து, அதை எடுத்துக் கொண்டு வரச் சொல்லி, அதைப் பிடித்துக் கொண்டாள்.

ஓர் கொடிச் சீலையையும் செய்யச் சொன்னுள். இதில் சேசுநாதசாமி பொது தீர்வை காலத்திலே தமது சிம்மாசனத்தில் உட்கார்ந்து தீர்வையிடும் பாவனையாக சித்திரிக்கப் பட்டிருந்தது. மேலே "சேசு, மரி, நான் நம்பினேன்" என்று வரையப் பட்டிருந்தது. இவ்விதமாக மூன்று கொடிச்சீலைகளைத் தயாரிக்கச் சொன்னுள்.

இவைகளில் ஒன்றைத் தன் ஆத்தும குருவிடம் கொடுத்து, நாள்தோறும் இரண்டு விசை குருக்களையும் போர் வீரர்களையும் இக்கொடிச் சீலை அண்டைக் கூட்டி, தேவ மாதாவுக்குச் செபங்களைச் சொல்லி, கீர்த்தனைகளைப் பாடவேண்டு மென்று இவள் கட்டளையிட்டாள். அன்றைக்குப் பாவசங்கீர்த்தனம் பண்ணினவர்கள் மாத்திரம் இக் கூட்டத்துக்கு வரலாமென்றும் இவள் கட்டளையிட்டாள். இவ்வித ஏற்பாட்டால், மகா மூர்க்கமுள்ள விசுவாசமற்ற போர் வீரர்கள் நல் வழிக்கு வர ஏதுவாய் இருந்தது.

ஜான்தார்க் சண்டைக்குப் புறப்படுமுன் இங்கிலாந்து தேசத்து அரசனுக்கும் பெட்வோர்ட், சவ்வோக், தால்போட் முதலிய பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் ஓர் கடிதம் எழுதி அனுப்பினாள்.

இந்த மகா அதிசயமான கடிதத்தின் சாரமாவது: "இங்கிலாந்து தேசத்து அரசரே, இங்கிலாந்து தேசத்து அரசனுக்குப் பதிலாக இத் தேசத்தை ஆண்டு கொண்டிருக்கும் பெட்வோர்ட் பிரபுவே (Regent), வில்லியம் பிரபுவே (Guillaume de la Poule), சவ்வோக் பிரபுவே, மகிமை தங்கிய தோமாசே (Sir Thomas) பரலோக ராஜா அனுப்பிய மங்கைக்கு பிரான்சு தேசத்தில் நீங்கள் பிடித்த பட்டணங்களின் சாவிகளையெல்லாம் கொடுத்து விட வேண்டும். கடவுள் பேரால் அவள் இங்கே வந்திருக்கிறாள். பிரான்சு தேசத்தை அத் தேசத்து அரசனுக்கே கொடுத்து விட்டால், சமாதானத்துக்கு இவள் உடன்படுவாள். ஆர்லியன்ஸ் பட்டணத்தை முற்றுகை போட்டுக் கொண்டிருக்கும் வில்வீரர்களே, போர்வீரர்களே, மகான்களே, பெரியோர்களே, நீங்கள் யாவரும் இத் தேசத்தை விட்டு உங்கள் தேசத்துக்குப் போங்கள். இது கடவுள் கட்டளை; போகா விட்டால், இம் மங்கையானவள் உங்களுக்குப் பெருத்த நஷ்டம் வருத்துவிப்பாள். இங்கிலிஷ் அரசரே, நான் தளகர்த்தன். இத் தேசத்தில் நீங்கள் எங்கே இருந்தாலும் உங்களைத் துரத்தி அடிப்பேன் அல்லது கொல்வேன். பிரான்சு தேசத்தை விட்டு உங்களைத் துரத்தும்படி பரலோக ராஜாவாகிய கடவுளே என்னை அனுப்பினார். இந்த பிரான்சு தேசம் பரலோக ராஜாவாகிய கடவுளுக்குத்தான் சொந்தம். சார்ல்ஸ் அரசர்தான் இதற்கு உரிமையுள்ளவர். இதுதான் கடவுள் கட்டளை.

அர்ச். ஜான்தார்க் போர்வீரன் உடை தரித்தல்.

இவைகளைக் கடவுள் எனக்கு வெளிப்படுத்தினர். இவ்வரசர் பாரிஸ் பட்டணத்தில் ஒட்டலோகமாய்ப் பிரவேசிப்பார். என் வார்த்தைகளை நீங்கள் நம்பாதே போனல், நாங்கள் சண்டைபோடுவோம். அப்பேர்ப்பட்ட சண்டை இத்தேசத்தில் ஆயிரம் வருஷ காலமாய் நடந்திருக்காது. பெட்வோர்ட் பிரபுவே, நீர் எங்களோடு வீணுய்ச் சண்டை போட வராதேயுமென்று கெஞ்சிக்கேட்கிறேன். என்னை நீர் சட்டை பண்ணுவிட்டால், பிரஞ்சுகாரர்கள் சண்டை போடுவார்கள். இப்பேர்ப்பட்ட சண்டையை கிறீஸ்துவர்கள் எத் தேசத்திலும் போட்டிருக்க மாட்டார்கள். ஆர்லியன்ஸ் பட்டணத்திலே இருவரும் சமாதான உடன்படிக்கை செய்யலாம். பதில் எழுதவும். இது அர்ச்சிய சிஷ்ட வாரத்து புதன் கிழமை எழுதப் பட்டது,'' என்று ஜான் தார்க் கடிதம் எழுதி அனுப்பினுள்.

ஆனுல் இதை இங்கிலீஷ்காரர்கள் கொஞ்சமாகிலும் மதிக்காமலிருந்தது மாத்திரமல்ல, இதைக் கொண்டு போனவனைப் போர்ச்சட்டத்துக்கு விரோதமாகக் கைதியாக்கினுர்கள்.

சேனையானது 1429-ம் ஷு ஏப்ரல் மீ 27-ம் தேதி புறப்பட்டது. சுமார் 10000 போர் வீரர்கள் இருந்தார்கள். இதில் பிராஞ்சு தேசத்து பிரபலிய போர் வீரர்கள் சேர்ந்திருந்தார்கள். அலான்சோன், லாகீர் முதலிய பிரக்கியாதி பெற்ற தளகர்த்தர்களும் இருந்தார்கள். இவர்கள் யாவருக்கும் ஜான் தார்க் அம்மாள் பெரிய தளகர்த்தராக நியமிக்கப்பட்டு ஆர்லியன்ஸ் பட்டணத்தைப்பிடிக்க மகா வீரசூரத்துடன் சென்றுள்.

போர் வீரர்களை இவள் மகா கண்டிப்பாய் நடத்தினாள். நாள்தோறும் இவர்கள் தேவநற்கருணை வாங்க வேண்டுமென்றும், மதுபானம் குடிக்கக்கூடாதென்றும், வேசிப்பெண்கள் சேனைப்பக்கம் வரலாகாதென்றும் ஆக இவை முதலிய கட்டளைகளைக் கொடுத்தாள்.

இவர்கள் யாவரும் மகா உற்சாகத்தோடு இஸ்பிரீத்து சாந்துவே வாரும், வேனி கிரேயாத்தோர் (Veni Creator) என்னும் கீர்த்தனையைப் பாடிப் புறப்பட்டார்கள்.

ஜான் தார்க் வெண்ணிறமுள்ள இருப்புச் சட்டையை அணிந்து கொண்டு, ஓர் சிறு கோடாலியைக்கையில் பிடித்துக்கொண்டு, கருப்பு நிறமுள்ள ஓர் குதிரை மேல் ஏறும் போது, ஓர் அதிசயம் நடந்தது. அக்குதிரை அவளை ஏற விடாமல், தாண்டித் தாண்டிக் குதித்தது. இவள் எவ்வளவு பிரயாசைப்பட்டாலும், ஏறமுடியவில்லை. சுற்றியிருந்தவர்கள் திகைத்துக்கொண்டிருக்கும்போது, பக்கத்திலிருந்த ஓர் கோவிலுக்கருகாமையிலுள்ள சிலுவை அடிக்கு இதைக் கொண்டுபோகச்சொன்னாள். அங்கே போனவுடனே, குதிரை மகா சாந்தமாய் நின்றது. பிறகு அக்குதிரைமேல் ஏறிச் சென்றாள்.

ஆர்லியன்ஸ் பட்டணத்திலிருந்த தினுவா என்னும் தளகர்த்தனை ஜான் தார்க் கண்டாள். இவர் இராஜ குலத்தார். சார்ல்ஸ் அரசனுக்கு நெருங்கிய பந்து. வீரசூரமும் மிக சாமர்த்தியமுமுள்ள தளகர்த்தர். ஆகிலும் இவர் இப்பட்டணத்தைப் பிடிக்க முடியவில்லை. இவர் இவளைக் கண்டவுடனே, பிரான்சு தேசத்தை இரட்சிக்க இவள் கடவு

ளால் அனுப்பப்பட்டவளென்று நன்ருய்க் கண்டு கொண்டு தன் அதிகாரம் யாவற்றையும் இவளிடம் ஒப்புக்கொடுத்தார். லாகிர் முதலிய பிரஞ்சு படைத்தலைவர்களைப் போல இவரும் இந்த அதிசய மாதின் கட்டளைக்கு அடங்கி நடந்தார். இவளுக்கு விரோதம் செய்தால் இங்கிலீஷ்காரரை தேசத்தை விட்டுத் துரத்த முடியாதென்று கண்டு கொண்டு, இவள் பண்ணின ராணுவ ஏற்பாடுகளுக்கு முற்றிலும் இவர் உட்பட்டிருந்தார்.

ஆகிலும் வேறு சில பிரஞ்சு தளகர்த்தர்கள் இவளுக்கு அடங்கி நடக்க வில்லை. பட்டிக்காட்டிலே பிறந்த ஓர் பெண் பிள்ளைக்கு நாம் அடங்கி நடக்கிறதா? பதினேழு வயதுள்ள ஓர் சிறு பெண்ணுக்குப் போர் விஷயத்தைப் பற்றி என்ன தெரியும்? இவள் பிறக்கா முன்னே போர்த் தொழிலில் கீர்த்தி பெற்ற நாம் இவளுக்கு அடங்கி நடக்கிறதா? என்று கலகம் செய்யத்துவக்கினுர்கள். இப்படி சேனையில் நடந்த கலகத்தை தினுவா என்பவர் அடக்கி அமைதியை உண்டாக்கினுர்.

ஆர்லியன்ஸ் பட்டணத்தைப் பிடிக்க எட்டு நாள் சென்றன.

இங்கிலீஷ்காரர்கள் வெடி குண்டுகளையும், அம்புகளையும், கற்களையும் மழை போல் சொரிந்தார்கள். ஜான் தார்க் அம்மாள் தன் குதிரை வாகனத்தில் ஏறிக்கொண்டு கையில் கொடிச்சீலையைப் பிடித்த வண்ணமாய் தன்பட்டாளத்தை அமட்டிக்கொண்டு, “விடாதேயுங்கள், விடாதேயுங்கள்” என்று சொல்லிக்கொண்டு, நாள்முழுவதும்

சண்டை முகத்திலேயே நின்று கொண்டிருப்பாள். சண்டை மகா பயங்கரமாய் நடந்தது.

இப்படி சண்டைமும்முரமாய் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில்கூட, இவள் பாவசங்கீர்த்தனம் பண்ணுவாள். பட்டாளத்திலுள்ள சகல போர்வீரரையும் அச்சமயத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணக் கட்டளை யிடுவாள். அப்படி இவர்கள் பாவசங்கீர்த்தனம் பண்ண விட்டால், பட்டாளத்தை விட்டுவிட்டுப் போய் விடுவதாகவும் சொன்னாள்.

எதிரிகள் இவளைக் கண்டால், ஏசித் திட்டினார்கள். சிலர் பரிகாசம் பண்ணினார்கள். "உன்வீட்டுக்குப் பால் கறக்கப்போ" என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்.

ஓர் நாள் இவள் "இன்று நடக்கும் சண்டையில் தோளில் நான் காயப்படுவே" னென்றுத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னாள். இப்படி பல தடவையும் சொல்லியிருந்தாள். அப்படியே நடந்தது. அதெப்படியெனில், இங்கிலீஷ்காரர்கள் கட்டிய கோட்டைகள் யாவற்றிலும் மகா முக்கியமான லேதுரல் (Les Tourelles) என்னும் கோட்டையை மே மீ 7-ம் வ சனிக்கிழமை இவள் தாக்கினாள். சுமார் பத்து மணிநேரம் சண்டை உக்கிரமாய் நடந்தது. அப்போது போர் வீரர்களை ஏவிக்கொண்டிருக்கும் சமயத்தில், வலது புறத்துத் தோளில் ஓர் அம்பு ஆழமாய்ப் பாய்ந்தது. இரத்தம் ஏராளமாய் ஓடிற்று. தன் கையாலே அதைப் பிடுங்கி எறிந்து விட்டு, திரும்பவும் சண்டை முகத்துக்குப் போய், தன் கொடிச் சீலையை ஆட்டிக் கொண்டு "போ, போ, நாம் இன்று வெற்றி அடைவோம்" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னாள். எதிரிகள் பயந்து,

நடுக்கமுற்று, இவள் "மாயக்காரி" "மந்திரக்காரி" என்று சொல்லிக் கொண்டு, ஓட்டம் பிடித்தார்கள்.

இவர்கள் கட்டிய கோட்டை கொத்தளங்கள், வைத்திருந்த பயங்கரமான பீரங்கிகள் முதலிய யாவற்றையும் விட்டுவிட்டு ஓடிப்போனார்கள்.

எட்டுமாத காலமாய் முற்றுகை போடப்பட்ட ஆர்லியன்ஸ் பட்டணம் பிடிபட்டது.

ஒருக்காலும் பிடிக்க முடியாதென்னப்பட்ட இப் பட்டணத்தை எட்டே நாளில் இவள் பிடித்தாள். பிராஞ்சு தேசத்து வீர சூர தளகர்த்தர்கள் யாவரும் முடியாதென்னப்பட்ட இக் காரியத்தை பதினேழு வயதுள்ள ஓர் பெண் முடித்தாள். (a)

(a) பிரஞ்சுக்காரர்கள் அடைந்த இம்மகா வெற்றியை 1429-ம் ஹூ மே மீ 8-ம் உ முதல் இதுவரையில் வருஷா வருஷம் இவர்கள் ஆர்லியன்ஸ் பட்டணத்தில் கொண்டாடுகிறார்கள். இத்தேதிக்கு முந்தின நாள் சாயந்தரம் ஓர் குதிரைப் பட்டாளம் கொம்பு ஊதிக்கொண்டு, கையில் பந்தங்களைப் பிடித்துக் கொண்டு, பட்டணத்தைச் சுற்றி வருவார்கள். அவர்களுக்குப் பிறகு மேற்றிராணியார், குருக்கள், முதலியவர்கள் கொடியைப் பிடித்துக்கொண்டு போவார்கள். அப்போது ஐந்நூறுபேர்கள் இக் கொடிக்கு நமஸ்காரம் செய்வார்கள். மறுநாள் பாட்டுப் பூசையும் ஜான் தார்க்கைப் பற்றி ஓர் பிரசங்கமும் நடக்கும். பிறகு சுற்றுப் பிரகாரம். ஜான்தார்க்கின் கொடியைச் சுற்றி அநேக தமாஷ்கள் நடக்கும். பிறகு இவள் காயம்பட்ட இடத்திலே எல்லாரும் பாட்டுப் பாடுவார்கள். இப்படியே வருஷா வருஷம் நடக்கிறது.

அப்போது பிரான்சு தேசத்தாருக்கு உண்டான சந்தோஷத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? எங்கும் சந்தோஷம், எல்லோருக்கும் ஆனந்தம்.

ஜனங்கள் ஜான் தார்க்கின் கைகளையும், அவள் சட்டையையும், அவள் கொடிச்சீலையையும் வெகு ஆவலுடன் முத்தமிட்டார்கள். அவர்கள் முழங்காலி லிருந்து கொண்டு சந்தோஷத்தால் கூக்குரலிட்டு, அழுதார்கள். கடவுள் தங்களுக்கு அனுப்பிய ஓர் சம்மனசு இவள் என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்.

எல்லாரும் எல்லை யற்ற இன்பம் கொண்டார்கள். அண்டமெல்லாம் அதிர ஆர்ப்பரித்தார்கள்.

இந்த வெற்றியால் இருதய கமலத்தை ஆட்டும் தேச பக்தியும், ராஜபக்தியும் தேசத்தார்களுக்கு உண்டாயின. ஜான் தார்க்கின் பேரில் மகா விசுவாசமும் உண்டாயிற்று. "கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும்" என்னும் பழமொழி போல இவளுடைய ஒவ்வொரு செயலும் தெய்வச் செயல் என்பதாகச் சொன்னார்கள்.

ஆனால் இதற்கு விரோதமாக செல்வமும் செருக்கும், ஆசையும் ஆணவமும், அதிகாரத் திமிரும் படைத்த இங்கிலீஷ்காரர்களுக்கோ இடி விழுந்ததுபோல் திகில் உண்டாயிற்று. ஜான் தார்க்கின் பேரில் எல்லை யற்ற கோபம் கொண்டார்கள்.

மற்ற தேசத்தார்கள் அடக்க முடியாத வியப்பு அடைந்தார்கள்.

5-ம் அதிகாரம்.

ஜான்தார்க் அரசனுக்கு முடிசூட்டுதல்.

ஆர்லியன்ஸ் பட்டணத்தை மீட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு ஜான்தார்க் அரசனைப் பார்க்கப் போனாள். இவளைக் கண்டவுடனே அவருக்கு ஆனந்த சந்தோஷம் உண்டாயிற்று. ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவளைப்போல இவளைச் சகல சேனைக்கு முன்பாகக் கட்டித் தழுவினார். இவளோ அரசனுக்கு முன்பாக முழங்காலிலிருந்து கொண்டு, உடனே ரெயிம்ஸ் பட்டணம் போக வேண்டுமென்றுசொன்னாள்.

ஆகிலும், அரசனிடமிருந்த சில மந்திரிகள் இவள் ஆர்லியன்ஸ் பட்டணத்தைப் பிடித்தது ஓர் அதிர்ஷ்டமேயல்லாமல் புதுமையல்லவென்றும், ஆகையால் இவள் கடவுளால் அனுப்பப்பட்டவளல்லவென்றும் சொன்னார்கள்.

ஆனால் இவள் "இராஜ குமாரரே, இப்படி கூட்டங்களைக் கூட்டிக் காலதாமதம் செய்ய வேண்டாம். உடனே இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு உமக்கு உரிய கிரீடத்தை ரெயிம்ஸ் பட்டணத்தில் நீர் பெற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் பேரால் இதை உமக்குச் சொல்லுகிறேன். இன்னும் ஒரே வருஷந்தான் நான் உயிரோடிருப்பேன். அதற்குள்ளாக என்னிடத்திலிருந்து நீர் வாங்க வேண்டிய வேலை யாவற்றையும் வாங்கிக் கொள்ளும்" என்று மகா தைரியமாய்ச் சொன்னாள்.

அப்போது ரெயிம்ஸ் பட்டணத்துக்குப் போவதைப் பற்றிச் சில மந்திரிமார்களுக்கும் ஜான்தார்க்குக்கும் வாக்கு வாதம் உண்டாயிற்று. இவ்விடத்திற்கும் ரெயிம்ஸ் பட்டணத்திற்கும் வெகுதூரம் இருப்பதாலும், நடுவேயிருக்கப்பட்ட இடம் எதிரிகள் வசம் இருப்பதாலும், அப்பட்டணத்துக்கு நேராய்ப் போவது அவிவேக மென்றும் சொன்னார்கள்.

கடைசியாய் அவர்களுடைய தீர்மானத்துக்கு இவள் உட்பட்டாள். ஆகையால் "லுவார் ஆற்றுப் பள்ளத்தாக்" கென்று சொல்லப்படும் இந்த மாகாணத்திலுள்ள பட்டணங்களைப் பிடித்து, இவைகளிலுள்ள இங்கிலீஷ்காரர்களைத்துரத்திவிட்ட பிறகு ரெயிம்ஸ் பட்டணம் போய் ராஜாவுக்கு முடி சூட்டுவதென்று சகலரும் தீர்மானம் செய்தார்கள்.

இதற்காக பேரி நாட்டிலுள்ள செய் என்னும் பட்டணத்திலே ஜான்தார்க் சேனையைச் சேர்த்தாள்.

லுவார் பள்ளத்தாக்கிலுள்ள ஜார்கோ என்னும் பட்டணம் இங்கிலீஷ்காரர்கையில் இருந்தது. இதைப் பிடிக்கும்படி ஜான்தார்க் தன் சேனையோடு எதிரிகளைத் தாக்குகையில், அவர்கள் இவள்பேரில் ஓர் பெரிய கல்லை விட்டு எறிந்தார்கள். இது இவள் தலைச்சீராவில் வெகு பலமாய் மோதினதால், மயக்கங் கொண்டு கீழே விழுந்தாள். சற்று நேரத்துக்குப்பிறகு, மயக்கம் தெளிந்து, திரும்பவும் சண்டைக்குப் போனாள்.

இதற்குப் பிறகு போஜென்சி, பத்தே முதலிய பட்டணங்களைப்பிடித்ததால், லுவார் ஆற்றுப்பள்ளத்தாக்கு


இங்கிலாந்து
இங்கிலீஷ் கால்வாய்
ரூவன்
ரைம்ஸ்
மியூஸ் நதி
வோகுலர்
தோன்ரெமி
பாரிஸ்
ஆர்லியன்ஸ்
ஸீன் நதி
லுவார் நதி
ஷினான்
பிரான்ஸ்
பிஸ்கே
வளைகுடா
ரோன் நதி
பிரினிஸ் மலை
ஸ்பெயின்
மத்திய
தரைக்
கடல்

முழுவதும் பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிற்று. ரெயிம்ஸ் பட்டணம் போகவும் வழி உண்டாயிற்று.

இச்சமயத்திலே பிரஞ்சுக்காரர்களுக்குள்ளேயே ஜான் தார்க்குக்கு விரோதமாக சில விரோதிகள் கிளம்பினார்கள். காய்மகாரத்தால் ஏவப்பட்ட சில பிரபுக்களும் மேற்றிராணிமார்களும் சேர்ந்து கொண்டு, இவள் செய்த வேலையை யெல்லாம் கெடுக்கும்படி இரகசியத்தில் வேலை செய்தார்கள். ஆகையால் பத்தே சண்டைக்குப்பிறகு இவள் அரசனைப்பார்க்கப் போனபோது, அவர் இவளைச் சட்டை பண்ண வில்லை. அப்போது இவள் அரசனுக்குச் சொன்னதாவது: "அரசகுமாரனுக்கு முடி சூட்டிவிட்டால், பிரஞ்சுக்காரர்களுக்குத் தைரியம் உண்டாகும். பிரான்சுதேசத்திலுள்ள இங்கிலீஷ்காரருடைய அதிகாரமும் குறையும். கடைசியாய் இவர்கள் தேசத்தை விட்டு ஓடிப்போவார்கள்" என்று மகா ஊக்கத்தோடு சொன்னாள். இவள் சொன்ன இத்தீர்மானமானது மகா நியாயமானதென்று கண்டு, யாவரும் இதற்குச் சம்மதித்தார்கள்.

ஆகையால் ஜியன்சூர் லுவார் என்னும் பட்டணத்தில் இவள் சேனையைத்திரட்டினாள்.

போர்ச்சேவகர்கள் யாவரும் இவள் பேரில் மட்டுக்கடங்காத நம்பிக்கை கொண்டார்கள். துவக்கத்தில் 12,000 போர் வீரர்கள் இப்படையில் சேர்ந்தார்கள். போகப்போக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் ஏராளமான பேர்வழிகள் இதில் மகா உற்சாகத்தோடு சேர்ந்தார்கள்.

போகிற வழியிலே துருவா என்னும் பட்டணத்து வழியாய்ப் போக வேண்டியதாயிருந்தது (a). இதில் சில விநோதங்கள் நடந்தபடியால், இவைகள் குறிப்பிடத்தக்கன.

இது ஓர் பெரிய பட்டணம். வெகு பலமாய்க் கட்டப்பட்ட ஓர் பெரிய கோட்டை. இதைப் பிடிக்க முடியாதென்று அனேகர் எண்ணி யிருந்தார்கள்.

இப்பட்டணத்திலுள்ள ரிச்சார்ட் என்னும் ஓர் பிராஞ்சிஸ்கு சபை சன்னியாசியார் ஜான்தார்க்கைப் பார்க்க ஓர் நாள் வந்தார். இவர் ஓர் பெரிய பிரசங்கி. இவள் "ஓர் மந்திரவாதி" என்பதாய் நிட்சயித்திருந்தார். ஆகையால் இவர் இவளைப் பார்க்க வந்த சமயத்திலே, தான் அனேகம் விசை சிலுவை அடையாளம் போட்டுக் கொண்டதுமல்லாமல் இவளிடமிருந்த பிசாசை ஓட்டும்படி இவள் பேரில் அடிக்கடித் தீர்த்தம் தெளித்தார்.

அப்போது இவள் சிரித்துக்கொண்டு "பயப்படாமல் கிட்ட வாருங்கள். நான் ஓடிப்போக மாட்டேன்" என்று சொன்னாள். இவளைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் பட்டணத்துக்குள் போனவுடனே பட்டணத்துக்கதவைத் திறந்து விட்டு அரசனை உள்ளேவரச் சொல்லுங்களென்று ஜனங்களுக்குச் சொன்னார். ஜனங்களோ அதற்குச் சம்மதியாமல் இவரைப் பிடித்து ஜெயிலிலே அடைத்தார்கள்.

அல்லாமலும் இப்பட்டணத்து ஜனங்கள் சார்ல்ஸ் அரசனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஜான் தார்க்

(a) Troyes.

அம்மாள் ஓர் கடிதம் எழுதி, இவர்களுக்கு அனுப்பினாள். இவர்களோ இக்கடிதத்தை சர்க்கார் உத்தரவின் பேரில் பகிரங்கமாய் நெருப்பில் போட்டுக் கொளுத்தினார்கள்.

துருவா என்னும் இப்பட்டணமானது அரசனுக்கு விரோதமாக அவ்வளவு பிடிவாதமாயிருந்தது.

அப்போது அரசனும் பிரஞ்சு படையும் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் ஜான்தார்க் அவர்களைப் பார்த்து சொன்னதாவது: "இப் பட்டணத்தைப் பிடிப்பதைப் பற்றி அடிக்கடி கூட்டங்கள் கூட்ட வேண்டாம். இதனால் தாமதம் உண்டாகிறது. இன்னும் மூன்று நாளில் கடவுள் பேரால் இப் பட்டணத்தைப் பிடித்து, அரசன் கையில் ஒப்புவிப்பேன்" என்று சொல்லிவிட்டு, குதிரை மேல் ஏறி, பட்டணத்தைச் சுற்றி அநேக அற்புதமான செயல்களை (Manoevres) எல்லா சேனைக்கு முன்பாகச் செய்தாள். இரண்டு மூன்று தளகர்த்தர்கள் சேர்ந்து செய்தாலும் இப்பேர்ப்பட்ட செயல்களைச் செய்யவே முடியாது. இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த பட்டணத்து ஜனங்கள் யாவரும் பயந்து, நடுங்கி, மறுநாளே சார்ல்ஸ் அரசனை ஏற்றுக்கொண்டார்கள். ஜூலை-மீ 10-ம் வ அரசன் மகா ஆடம்பரத்தோடு இப் பட்டணத்துக்குள் பிரவேசித்தார்.

கடைசியாய் ஜான்தார்க் அம்மாள் அரசனோடு தன் சேனையுடன் ரெயிம்ஸ் பட்டணத்துக்குள் பிரவேசித்தாள்.

வெள்ளை நிறமுள்ள ஓர் குதிரைமேல் ஏறிக்கொண்டு தலையில் தொப்பியில்லாமல் ஏராளமான ஜனங்கள் சூழ

பட்டணத்திற்கு வந்தாள். எங்கும் சந்தோஷம். கோவில் மணிகள் யாவும் தொனித்தன.

அடுத்த நாள் அதாவது 1429-ம் வு ஜூலை மீ 17-ம் வ அப் பட்டணத்து அதிமேற்றிராசன கோவிலில் அரசனுக்கு அபிஷேகம் நடந்தது. அப்போது பிராஞ்சு தேசத்திலுள்ள அநேக பிரபுக்களும், எட்டு மேற்றிராணிமார்களும் விஜயம் செய்தார்கள். அப் பட்டணத்து அதிமேற்றிராணியாராகிய ரெஜினே என்பவர் (Reginault de Chartres) அபிஷேக சடங்கை நடத்தினர்.

அரசன் கெம்பீரமான தன் ராஜ உடுபாவனையோடு தன் சிம்மாசனத்தில் அமர்ந்தார். மெலிந்தசரீரமுள்ள ஜான் தார்க் அம்மாள் தலையில் தொப்பியில்லாமல் தன் போர் வீர உடை தரித்துக் கொண்டு, கையில் கொடி பிடித்த வண்ணமாய் அரசன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். ஓர் பெரிய தூண் பக்கத்திலே ஜான் தார்க்கின் நேச தகப்பனர் முழங்காலிலிருந்து கொண்டு, கண்ணீர் சொரிந்த வண்ணமாய் நின்று கொண்டிருந்தார்.

மகத்வமான திவ்ய பூசை துவக்கிற்று. வழக்கப்படி அரசன் சொல்ல வேண்டிய சத்திய வார்த்தைப் பாட்டை எல்லாருக்கு முன்பாகக் கொடுத்தார். அதின் சாரமென்னவென்றல்:

"கடவுள் கிருபையால் பிராஞ்சு தேசத்து ராஜாவாகிய சார்ல்ஸ் என்னும் பேர் கொண்ட நான், கடவுள் முன்பதாகவும் அவருடைய அர்ச்சியசிஷ்டவர்கள் முன்பதாகவும்

எனக்கு இப்போது முடி சூட்டப்படும் இச்சமயத்தில் நான் சத்தியம் செய்வதென்னவென்ருல்: திருச்சபையையும், அதை ஆளும் மேற்றிராணிமார்களையும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவும் ஜனங்களையும் என்னுலான வரையில் காப்பாற்றுவேன். திருச்சபைக்கு விரோதமாக நடக்கும் பதிதரையும் இத் தேசத்தை விட்டு துரத்துவேன்'' என்பதே.

உடனே கூடியிருந்த ஜனங்கள் யாவரும் பெரும் கூச்சலிட்டார்கள்; சிலர் சந்தோஷத்தால் கண்ணீர் விட்டு அழுதார்கள்.

அப்போது அரசன் முழங்காலிலிருந்து தலைகுனிய, அதிமேற்றிராணியாரவர்கள் அவர் தலையின்மேல் அர்ச்சியசிஷ்ட எண்ணெயை ஊற்றி அபிஷேகம் பண்ணினுர். பிறகு அவர் தலைமேல் ராஜ கிரீடத்தை வைத்தார்.

உடனே எக்காளங்கள் ஊதப் பட்டன. கோவிலில் உட்கார்ந்திருந்த ஜனங்கள் யாவரும் "அரசன் வாழ்க" என்று சத்தமிட்டுக் கூவினுர்கள்.

பெரிய பீடத்தண்டை கையில் கொடி பிடித்துக் கொண்டிருந்த ஜான் தார்க் அம்மாள் முழங்காலிலிருந்து கொண்டு, கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்தாள். இவ்வதிசய மங்கையைப் பார்க்க ஜனங்கள் மகா ஆவல் கொண்டார்கள். விழுந்ததைக் குனிந்து எடுக்க முடியாத அவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் இருந்தது. சிந்தையை அள்ளிப் பிடிக்கும் நேசம் இவள்பேரில் அவர்களுக்கு உண்டாயிற்று. மெய்யாகவே இவளுடைய கீர்த்தியானது பத்துத்திசை

யும் பரந்த கடலுலகில் உலாவிற்று. "எங்கும் உன் புகழ் எங்கும் உன் பெயர்" என்ற பழமொழி இவளிடம் பூரணமாய் நிறைவேறிற்று.

ஆர்லியன்ஸ் மங்கையானவள் பிராஞ்சுதேச இரட்சகி ஆனாள்.

ஆனால் தாரணி முழுவதும் ஆண்டிட நினைத்த இங்கிலீஷ்காரருக்கோ சொல்லி முடியாத அவமானம் உண்டாயிற்று.

6-ம் அதிகாரம்.

ஜான்தார்க் பிடிபடுதல்.

அரசனுக்கு முடி சூட்டின அன்றைக்கே பிரான்சு தேசத்திலேயே பிரஞ்சுக்காரர்களுக்குள்ளேயே ஜான் தார்க்குக்கு விரோதமாக அனேக விரோதிகள் தோன்றினார்கள். இவளுடைய கீர்த்தி தேசமெங்கும் பரவியதால், அனேகர் காய்மகாரத்தால் பீடிக்கப்பட்டார்கள். "பதினெட்டு வயதுள்ள ஓர் பட்டிக்காட்டுப் பெண் நமது தேசத்தை இரட்சித்தாள். நமது தளகர்த்தர்கள் இதைச் செய்ய முடியவில்லை" என்று ஜனங்கள் எங்கும் ஓயாமல் சொன்னபடியால்தான், இவளைத் தொலைத்துவிட இவர்கள் எண்ணங்கொண்டார்கள். "மகன்செத்தாலும் பரவாயில்லை, மருமகள்கொட்டம் அடங்கிற்றே" என்னும் கொள்கையை இவர்கள் பின்பற்றினார்கள்.

அல்லாமலும் போவே பட்டணத்தைப் பிடிக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் இதின் மேற்றிராணியாராகிய கோஷோன் என்பவர் அரசனுக்கு விரோதமாயிருந்தபடியால் இதை அவருக்குக் கொடுக்கக் கூடாதென்று மிக மூர்க்கமாய் வாதாடினார். ஆனால் இதிலுள்ள ஜனங்களோ இவர்பேச்சைக்கேட்காமல் அரசன் கட்சியைச் சேர்ந்தார்கள். ஆகையால் மேற்றிராணியார் கட்டாயத்தால் இப்பட்டணத்தை விட்டு வெளியே போகவேண்டியதாயிற்று. ஆகையால் இவர் ஜான்தார்க்கைத் தீராப் பகையாய்ப் பகைத்தார்.

இதுவுமல்லாமல் சார்ல்ஸ் அரசனே தன் மந்திரிகள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, ஜான்தார்க்குக்கு விரோதமாக அனேக நடபடிக்கைகளை நடத்தினுர்.

ஆகையால் அரசனுக்கு முடிசூட்டின பிறகு இவளுடைய கீர்த்தி வர வர குன்றி போய் விட்டது. மெய்யாகவே "சேயை யிழந்த தாய்போலவும் சிறகு ஒடிந்த பறவை போலும்" இவளுடைய மனம் கிலேசம் அடைந்தது.

ஆகிலும் இச்சமயத்தில் ஓர்வித திகில் இங்கிலீஷ் காரரைப் பிடித்துக்கொண்டது. அதெப்படியென்ருல் ஜான் தார்க் கொடியை இவர்கள் கண்டவுடனே சண்டை போட பலனற்றவர்களாய் மலேத்துப்போய் நின்ருர்கள். இத்திகில் எவ்வளவு அதிகமாயிருந்ததென்ருல்: இங்கிலீஷ் அரசன் சண்டைக்குப் போக தன் போர் வீரர்களுக்குக் கட்டளை கொடுத்தால், போகவே மாட்டோமென்று மறுத்து விட்டார்கள். அப்போது "யாதாமொருவன் ஜான் தார்க்கின் மாந்திரிகத்துக்குப் பயப்பட்டு அரசன் கட்டளையை மீறினுல் அவன் வேலையை விட்டுத் தள்ளப்படுவதுமல்லாமல் சிறைச்சாலையில் அடைக்கப்படுவா"னென்று இங்கிலீஷ் அரசன் 1430-ம் ஸு மே மீ 3-ம் வ ஓர் கண்டிப்பான கட்டளையைப் பிரசித்தம் செய்யவேண்டியதாயிற்று.

ஓர் நாள் ஜான் தார்க் சண்டைக்குப் புறப்பட்டு பரிஸ் பட்டணத்தருகேயுள்ள சென்டெனி என்னும் பட்டணத்தைப் (St. Denis) பிடித்தாள். இதில் ஓர் கூரிய அம்பு இவள் தொடையில் பட்டதால் மிகவும் உபத்திரவப் பட்டாள். ஆகிலும் சண்டை முகத்தைவிட்டுப் போகவில்லே.

இவள் தேசத்துக்குச் செய்த பெருத்த நன்மைகளுக்காக அரசன் இவளுக்கு துலி (Du Lis) என்னும் கௌரவ பட்டம் அளித்தார். இதை இவளுடைய சகோதரர்களும் இவர்களுடைய சந்ததியார்களும் பெற்றுக் கொண்டார்கள்.

கடைசியாய் இவள் பிடிபட்டுக் கைதியாக்கப்படும் காலம் வந்துவிட்டது. இப்படி நடக்குமென்று தெய்வ வாக்கு இவளுக்கு அடிக்கடிச் சொல்லிற்று. அப்படியே அது நிறைவேறிற்று.

கோம்பியன் பட்டணமானது பிராஞ்சு தேசத்துத் திறவுகோலா யிருந்தது. இங்கிலீஷ்காரரும் பர்கண்டியரும் சேர்ந்து இதைப் பிடிக்கப்போனார்கள். அப்போது இவள் இப் பட்டணத்துக்கு உதவியாக வந்தாள். ஓர் நாள் கூட்டமாயிருந்த சில ஜனங்களைப் பார்த்து சொன்னதாவது: "என்னை சில பேர்கள் காட்டிக் கொடுப்பார்கள். எதிரிகள் கையில் நான் அகப்பட்டு, கிரயத்துக்கு விற்கப் படுவேன். என்னை சிறைச்சாலையில் அடைத்துக் கடைசியாய் என்னைக் கொலை செய்வார்கள். எனக்காக நீங்கள் வேண்டிக் கொள்ளுங்கள். இனி நமது அரசனை சேவிக்க முடியாதென்று மிகவும் வருத்தப் படுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அவளோடு கூடியிருந்தவர்களும் துக்கித்து அழுதார்கள்.

அதே நாள் சாயந்தரம் அதாவது மே மீ 24-ம் உ இது நிறைவேறிற்று. இவள் சண்டை செய்து கொண்டிருக்கும் போது, எதிரிகள் கையில் அகப்பட்டுக் கொண்டாள்.

அவர்கள் இவளைப்பிடித்துக் குதிரையினின்று கீழே தள்ளி மிக அவமானமாய்ப் பேசி இழுத்துக் கொண்டு போனார்கள். பிறகு போர் வீரர் உடையை உரிக்கும் சடங்கைச் செய்தார்கள். அதாவது அச்சண்டை முகத்திலேயே இவள் வைத்திருந்த ஈட்டி, பட்டாக்கத்தி, கத்தி, கை கோடாலி முதலியவைகளை பலவந்தமாய்ப் பிடிங்கினார்கள். இந்த அவமானமுள்ள சடங்கை எதிரிகள்நிறைவேற்றும்போது, கையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு அலறி அழுதாள். தான் பிடிபட்டது தனது தேசத்தார்களாலேயே என்று நினைத்து நினைத்து அழுதாள்.

பிறகு பாரமான சங்கிலிகளால் இவளுடைய கை கால்களைக் கட்டி, அருளப்பன் என்னப்பட்ட ஓர் பிரபுவுக்குச் சொந்தமான ஓர் கோட்டையில் (John of Luxemburg) அடைத்தார்கள்.

இவள் இங்கே இருக்கும்போது கோம்பியன் பட்டணம் மகா ஆபத்திலிருக்கிறதென்று கேள்விப்பட்டு, இதை மீட்கும்படி இக் கோட்டையிலிருந்துத் தப்பித்து ஒடும்படி இரண்டு விசை பிரயாசைப் பட்டாள். ஓர் விசை தான் அடைபட்டிருந்த அறுபது அடி கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து, தப்பித்து ஓடலாமென்று, கீழே குதித்தாள். ஆனால் பலத்த காயத்தால் மூன்று நாள் வரையில் கடின ஜுரத்துக்குள்ளானாள். இவள் செத்துப்போவாளென்று எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் தப்பித்துக் கொண்டாள்.

இங்கிலீஷ்காரர்கள் இவளைப்பிடித்து கைதுசெய்த பர்கண்டிக்காரனிடமிருந்து சுமார் 5லட்சம் ரூபாய்க்கு

(£ 23,000) விலைக்கு வாங்கி, ரூவன் பட்டணத்துக்கு 1430-ம் ௵ டிசம்பர்மீ 23-ம்வ கொண்டு வந்தார்கள். இங்கே கை, கால், கழுத்தை நன்ருய்க் கட்டி, ஓர் இரும்புக்கூண்டு செய்து, ஓர் துஷ்ட மிருகம்போல் இவளை அதில் அடைத்தார்கள். ஐந்து இங்கிலீஷ் போர்வீரர்கள் இதை இராப்பகலாய்க் காவல் காத்தார்கள். இவர்களில் இருவர் எப்போதும் அறைக்குள் இருந்ததால், இவள் தனியாய் ஒருநாளும் இருந்ததில்லை.

இவளைப்பிடித்து சிறைப்படுத்தினது ஓர் பெரிய மகா ராஜாவைப்பிடித்து சிறைப்படுத்தினதற்கு ஒப்பாயிருந்தது.

இப்போது இங்கிலீஷ்காரர்களுக்கு எல்லையற்ற சந்தோஷம் உண்டாயிற்று. இவர்கள் தன்பேரில் கொஞ்சம் தயவுதாக்ஷணியம் காண்பிப்பார்களென்று இவள்நம்பினுளா? இல்லையில்லை. இவர்கள் கல்லிலே நாருரிக்கும் மிலேச்சர்களென்று நன்ருய்த்தெரியும். "ஐயையோ தெய்வமென்று அழுதுபுறண்டாலும்" இவர்கள் இவளைசும்மா விடப்போகிறதில்லை. கொலை செய்யத் தீர்மானித்து விட்டார்கள்.

7-ம் அதிகாரம்

ஜான்தார்க்கை விசாரணைசெய்து கொலை செய்கிறார்கள்.

சிறையில் அடைபட்ட ஜான்தார்க்கை விசாரித்து தண்டிக்க இங்கிலீஷ் அரசன் ஓர் நீதிஸ்தலத்தை ஸ்தாபித்தான்.

இந் நீதிஸ்தலத்தைப்பற்றி தோமாஸ் என்னும் சாஸ்திரி (Thomas de Quincey) சொல்வதாவது: "உலகம் உண்டான நாள்துவக்கி இதுவரையில் இவ்வித விசாரணை இருந்ததில்லை. இவளைக்கேட்ட கேள்விகளும், இவள் அளித்த பதில்களும், வியாச்சியம் நடந்த முறையும் மகா அதிசயத்தை உண்டாக்குகின்றன" என்று எழுதுகிறார்.

இதில் ஓர் காரியம் நிச்சயமானது. அது என்னவென்றால்: இவளை சிறையிலிருந்து விட்டுவிடவே கூடாது. எப்படியாவது இவளைக் கொலை செய்யவேண்டும். இவள் 'மந்திரக்காரி' என்பதாக நீதி கர்த்தாக்கள் தீர்மானம் செய்ய வேண்டுமென்று இங்கிலீஷ்காரர்கள் பூரணமாய் முன் ஏற்பாடு செய்தார்கள். இதை இங்கிலீஷ் அரசன் 6-ம் என்றி என்பவன்பேரால் 1431-ம் ௵ ஜனவரி ௴ 3-ம் உ ரூவன்பட்டணத்தில் எழுதப்பட்ட அதிகாரப் பத்திரங்களைக்கொண்டு (Letters—patent) பூரணமாய் எண்பிக்கலாம். அல்லாமலும் இவளை விசாரிக்கும் நியாயாதிபதிகள் கொஞ்சமாகிலும் இவள்பேரிலே தயை தாக்ஷணி

யம் காண்பிக்கக்கூடாதென்று இவர்களுக்கு இங்கிலீஷ்காரர்கள் கண்டிப்பான எச்சரிக்கை கொடுத்தார்கள். ஆகையால் "கோடி வித்தையும் கோடாகோடி வித்தையும் கூழுக்கே" என்னும் கொள்கையால் இவர்கள் பீடிக்கப் பட்டிருந்தார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஜான் தார்க்கின் பேரிலே இங்கிலீஷ்காரர்கள் எவ்வளவு கோபாவேசம் கொண்டார்களென்றால்: இவள் நல்லவளென்று ஓர் பெண்பிள்ளை சொன்னதற்கு, இங்கிலீஷ்காரர்கள் உடனே இவளைப்பிடித்து உயிரோடவே நெருப்பில் போட்டுப் பொசுக்கிக் கொன்றுவிட்டார்கள். பூனைக்கு உண்டோ தவமும் தயையும்?

இவளை விசாரிக்கும்படி நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளோ சகல சாஸ்திரங்களையும் கற்ற சிறந்த பண்டிதர்கள். பாரிஸ் பட்டணத்திலே மகா கீர்த்திபெற்ற சொர்போன் சர்வகலாசாலையிலும் இன்னு மற்ற பெரிய கல்லூரிகளிலும் தீரக்கற்று, பெரியபெரிய கௌரவப் பட்டங்களையும் தரித்தவர்கள்.

ஆனால் இவர்கள்யாவரும் "கடுக்கன் இல்லாவிட்டால் காது கேட்காது", "தாயும்சரி, தாசியும்சரி" என்னும் கொள்கைகளைக் கொண்டவர்கள்.

இவர்கள் இவள்மேல் அகங்காரப்படுவதற்கு ஓர் முக்கியமான முகாந்தரம் உண்டு. அதென்னவென்றால்: "இங்கிலீஷ்காரர் கட்சி தோற்றுப்போகும். இங்கிலீஷ்காரர்கள் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்." இவை இரண்டும் நிட்சயமென்பதாய் எழுத்தறிவில்லாத இந்தப்பட்டிக்

காட்டுப்பெண் மகா திடாரிக்கமாய்க் கடவுள்பேரால் சொன்னுள், ஆகையால் இவளை எப்படியாவது தொலைக்க வேண்டுமென்று இந்த நியாயாதிபதிகள் எண்ணங்கொண்டார்கள்.

"பசுகருப்பானுல் பாலும் கருப்பு" என்னும் பழமொழியை இவர்கள் கைக்கொண்டார்களென்று சொல்லவும் வேண்டுமோ?

ஜான் தார்க்குக்கு விரோதமாக இங்கிலீஷ்காரரும் இவர்கள் கட்சியைச்சேர்ந்த பிரஞ்சுகாரர்கள் மாத்திரமல்ல, பிராஞ்சு அரசன் 7-ம் சார்ல்ஸ் என்பவரும் இவரைச் சேர்ந்த பிரஞ்சுகாரர்களும்கூட இவளுக்கு விரோதமாயிருந்தார்களென்று சொல்ல வேண்டும்.

இவர்கள் காய்மகாரத்தால் தூண்டப் பட்டு, இவளுடைய கீர்த்தியைக் கெடுக்க எண்ணங்கொண்டார்கள்.

ஏனென்றுல் இவளுடைய ஏக முயற்சியால் ரெயிம்ஸ் பட்டணத்தில் முடி சூட்டப்பட்ட 7-ம் சார்ல்ஸ் அரசனுவது அல்லது இவளுடைய மகா வெற்றிகளை மிகவும் புகழ்ந்து பேசின துனுவா, டலான்சோன் முதலிய தளகர்த்தர்களாவது ஜெயிலிலே அடைபட்ட இவளை மீட்கவாவது அல்லது இவளுக்கு உதவி செய்யவாவது எண்ணங்கொள்ளவில்லை. எல்லாரும் இவளைக் கைவிட்டார்கள்.

"செத்தவரை மறந்தாலும் செய்தவரை மறக்கலாகாது" என்னும் நீதி மொழியை இவர்கள் யாவரும் மறந்துவிட்டார்களென்றே சொல்ல வேண்டும்.

1431-ம் ஸு பெப்ரவரி மீ 21-ம் உ புதன் கிழமை காலை 9 மணிக்கு ரூவன் பட்டணத்திலுள்ள கோட்டைக் கோவிலில் முதல் விசாரணை துடங்கிற்று.

ஜான் தார்க் அம்மாள் தன் ஆண் உடையைத் தரித்துக் கொண்டு, தலையில் கருப்புத் தொப்பியுடன், காலில் சங்கிலியால் கட்டப் பட்ட வண்ணமாய் நீதிஸ்தலத்துக்கு கொண்டு வரப்பட்டாள். தனக்கு முன் நாற்பத்திரண்டு நீதி விசாரணைக்கர்த்தாக்கள் உட்கார்ந்திருந்தார்கள். இவர்களுக்குத் தலைவர் கொஷோன் என்பவர்.

சுற்றி ஏராளமான ஜனங்கள் கூடி யிருந்தார்கள்.

அன்றைக்குப் 'பூசை காண வேண்டுமென்றும், பாவ சங்கீர்த்தனம் பண்ணி நன்மை வாங்க வேண்டுமென்றும் இவ்வம்மணி கெஞ்சிக் கேட்டாள். இவள் செய்த அக்கிரமங்களைப் பற்றி அவ்வுத்திரவு கொடுக்கப்பட மாட்டாதென்று நீதி கர்த்தாக்கள் கட்டளை கொடுத்தார்கள்.

விசாரணை துவக்கு முன், இவள் முழங்காலிலிருந்து, சுவிசேஷப் புஸ்தகங்களைத்தொட்டு, தான் உண்மையையே சொல்வதாகச் சத்தியம் செய்தாள்.

இந்த நீதி விசாரணை சுமார் ஐந்து மாத காலம் நடந்தது.

இவ்விசாரணை நடந்த முறையானது சட்ட விரோதமாகவும், மகா பார பட்ச முள்ளதாகவும் இருந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. அனேக அநியாயங்கள் நடந்தன.

அவைகளில் சிலவற்றைப் பற்றி இப்போது சொல்லுகி றேன்.

1-வது இவள் பிறந்த தோன்ரெமி ஊரிலும் இதைச் சுற்றியுள்ள ஐந்தாறு பங்குகளிலும் இவளுடைய நடத்தை யைப் பற்றி மகா நுணுநுணுக்கமாய் விசாரிக்கும்படி நீதி கர்த்தாக்கள் கெட்டிக்காரத்தனமுள்ள சில மனிதர்களை அங்கே அனுப்பினார்கள். ஆனால் இவர்கள் கொண்டு வந்த காரியங்களெல்லாம் இவளுக்கு மிகவும் சனுவாயிருந்தபடி யால், இவை "பிரயோஜன மற்றவை" யென்பதாக நீதி கர்த்தாக்கள் தள்ளி விட்டார்கள்.

2-வது இந்த நீதிஸ்தலத்து கர்த்தாக்களில் அனேகர் இங்கிலீஷ்காரருடைய கட்டாயத்தால் இந்த வேலையை ஒப்புக் கொண்டார்கள்.

3-வது இவள் கொடுத்த வாக்குமூலங்கள் இவளுக்கு சனுவாயிருக்கும் போது, இவைகளை எழுதக் கூடாதென்று நீதி கர்த்தாக்கள் எழுத்துக்கார குமஸ்தாக்களுக்குக் கண் டிப்பாய்ச் சொன்னார்கள். அப்படி செய்ய மாட்டோ மென்று சில குமஸ்தாக்கள் சொல்லி விட்டார்கள்.

4-வது இவள் திருச்சபைக்கு விரோதமாய்க் குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டபடியால், இவளைத் திருச்சபைக்குச் சொந்தமான சிறைச்சாலையில் அடைக்க வேண்டியதுதான் சட்டம். அப்படி செய்யாமல், தேச அரசனுக்குச் சொந்தமான சிறைச்சாலையில் அடைத்தார் கள்.

5-வது ஜான்தார்க் அம்மாள் தான் பெண்ணுனபடியா லும், படியாதவளானதாலும், தன் பாரிசமாகப் பரிந்து பேச ஓர் வக்கீல் கேட்டாள். அது கூடாதென்று நீதிகர்த் தாக்கள் மறுத்து விட்டார்கள்.

6–வது ஏசம்பார்ட் என்னும் சன்னியாசியார் (Bro. Yesambard) இரகசியமாய் சில யோசனைகளை இவளுக்குச் சொல்லிக்கொடுத்தார். இதைக்கண்ட வாரிக்பிரபு (Earl of Warwick) மகா கோபங்கொண்டு "இவளைப்பற்றி ஏன் உனக்கு அவ்வளவு கவலை? முட்டாள்! திரும்பியும் அப்படி செய்வாயாகில் பக்கத்திலிருக்கும் இந்த சீன் ஆற்றில் தள்ளி கொலை செய்வேன்" என்முன். உடனே சன்னியாசி யார் பயந்து நடுங்கி பக்கத்திலுள்ள ஓர் மடத்தில் நுழைந்து தப்பி ஓடிப்போய் விட்டார்.

7-வது அவராஞ்சுபட்டணத்து மேற்றிராணியார் (Bishop of Avranches) இவள்மேல் குற்றமில்லையென்று சொன்னதற்காக இவர் பிராஞ்சு தேசத்து அரசன் கட்சி யைச் சேர்ந்தவரென்பதாக, இவரை உடனே சிறைச்சாலை யில் அடைத்தார்கள்.

ஆகையால் இவ்விசாரணையானது மகா அநியாயமான தென்று யாவரும் சொல்வார்கள்.

"செல்வம் வந்தகாலை தெய்வமும் சிறிது" என்னும் பழமொழி இதில் விளங்கிற்று என்று சொல்ல வேண்டுமோ?

விசாரணை நேரத்தில் நீதிகர்த்தாக்கள் இவளைக்கேட்ட கேள்விகளுக்கு இவள் பதில் அளித்தது மகா உன்னத மானது.

அதெப்படி யென்றால்:

நீதி கர்த்தாக்களின் தலைவராகிய கோஷோன் என்ப வர் இவளைப் பார்த்து "பரமண்டல மந்திரம்" சொல் என்கிறார். அதற்கு இவள் "நான் உம்மிடத்தில் பாவ சங்கீர்த்தனம் பண்ணினால், அப்போது நீர் இந்த கேள் வியைக் கேட்பது நியாயம். ஆனால் இந்த நீதிஸ்தலத்தில் நீர் கேட்டால் அந்த மந்திரம் சொல்ல மாட்டேன்" என்றாள்.

ஷை கோஷோன் என்பவரே இவளைப்பார்த்து "உன்னை விசாரிக்க நான் நீதி கர்த்தனாக நியமிக்கப் பட்டி ருக்கிறேன்" என்று சொன்னார். அதற்கு இவள் "எச்ச ரிக்கை, உமக்குப்பெரிய ஆபத்து நேரிடும்" என்றாள்.

"நீ தரித்திருக்கும் ஆண் உடையை கழற்றிவிட்டு, பெண் உடையைத்தரிக்க வேண்டும்" என்று நீதிகர்த்தாக் கள் கேட்டார்கள். அதற்குஇவள் "சரி கொடுங்கள். உடனே நான் (என் ஊருக்குப்) போகிறேன்" என்றாள்.

நியாதியாபதிகள் விசாரணைக்குச் சம்பந்த மில்லாத கேள்விகளை சிலசமயத்தில் கேட்ட போது இவள் "இவைகளுக்கு பதில் சொல்ல மாட்டேன். இவைகளுக்கும் விசாரணைக்கும் சம்பந்த மில்லை" என்றாள்.

நீதி கர்த்தாக்கள் ஒரேசமயத்தில் பற்பல கேள்விகளைக் கேட்டு, இவள் புத்தியைத் தடுமாறச் செய்த போது, இவள் "ஏககாலத்திலே எல்லாரும் ஒன்றாய்க் கேள்வி கேட்டால், எப்படி நான் பதில் சொல்லுகிறது? பிரியமுள்ள நீதிகர்த்தாக்களே, அது சரியல்லவென்று சொல்லுகிறேன்" என்றாள்.

தன்வாக்கு மூலத்தை எழுதும் குமஸ்தா சில சமயத்திலே சரியாய் எழுதாதபோது, இவள் அவனைப்பார்த்து "என்வாக்கு மூலத்தை நீ சரியாய் எழுதாவிட்டால், உன் காதைப் பிடித்துதிருவுவேன்" என்றாள்.

"எங்கள் தீர்மானத்துக்கு நீ உட்பட வேண்டு" மென்று நீதி கர்த்தாக்கள் கேட்டபோது, இவள் "ரூவன், பாரீஸ் முதலிய பட்டணங்களிலுள்ள சாஸ்திரிகள் யாவரும் என்னை விசாரிக்கக் கூடாது. ஏனென்றால் கடவுள் பேரால் நான் வந்தேன். அவர் எனக்குக் கொடுத்த கட்டளையை நான்நிறைவேற்றினேன்" என்றாள்.

"என்னைப்பற்றி ரோமாபுரி பாப்பானவர் பண்ணும் தீர்மானத்துக்கு உட்படுவே" னென்றாள் இவள். அது கூடவே கூடாதென்று நீதி கர்த்தாக்கள் சொன்னார்கள்.

சண்டையில் இங்கிலீஷ்காரர்கள் ஜெயிப்பார்களா அல்லது பிரஞ்சுக்காரர்கள் ஜெயிப்பார்களா என்று நியாயாதிபதிகள் கேட்டதற்கு, இவள் சொன்னதாவது: "இன்னும் எழு வருஷத்துக்குள்ளாக இங்கிலீஷ்காரர்கள் ஓர் பெரிய தோல்வி அடைவார்கள். இது ஆர்லியன்ஸ்

பட்டணத்தில் அடைந்த தோல்வியைவிட அதிக பெரிய தாயிருக்கும்'' என்று தீர்க்கதரிசனம் சொன்னாள். (a)

நியாயாதிபதிகள் இவளைக் கொலை செய்ய வேண்டுமென்று எண்ணங் கொண்ட போது, இவள் சொன்னதாவது: ''இங்கிலீஷ்காரர்கள் என்னைக் கொலை செய்வார்களென்று எனக்கு நன்றாய்த் தெரியும். இப்படி செய்தால் இவ் விராச்சியத்தை ஆளலா மென்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இன்னும் லட்சம் இங்கிலீஷ் போர் வீரர்கள் இத்தேசத்துக்கு வந்தாலும், இதை ஜெயிக்க முடியாது'' என்று சொன்னாள்.

அப்போது ஸ்டாபோர்ட் என்ற இங்கிலிஷ் தளகர்த்தன் (Stafford) வெகு கோபங் கொண்டு, கத்தியை உறையிலிருந்து உருவி, இவளை வெட்ட ஓங்கினான். வாரிக் பிரபு அதைத் தடுத்து விட்டான்.

எங்கள் தீர்மானத்துக்கு உட்படாவிட்டால் உனக்குப் பெரிய ஆபத்து நேரிடும் என்று நீதி கர்த்தாக்கள் சொன்னதற்கு இவள் ''நான் எப்போதும் சொன்னதையே திருப்பிச் சொல்லுகிறேன். கொலைகாரர் என்னை நெருப்பில் போட்டுக் கொளுத்திச் சாகடிக்க தயாராயிருந்தாலும் நெருப்பின் நடுவே இருந்தாலும் வேறு வித வாக்குமூலம் கொடுக்க மாட்டேன்'' என்றாள்.

திருச்சபைக்கு விரோதமாக அநேக குற்றங்களை இவள் செய்தாளென்று நீதி கர்த்தாக்கள் சொன்னபோது

(a) அப்படியே 7 ம் சார்லஸ் அரசன் பாரீஸ் பட்டணத்தை 1436-ம் ஹூ ஏப்பிரல் மீ 14-ம் உ பிடித்து, 1437-ம் ஹூ நவம்பர் மீ 14 ம் உ அதற்குள் பிரவேசித்தார்.

இவள் "சேசுநாதர் சாமிபேரால் இக் காரியத்தைச் செய்தேன். கத்தோலிக் திருச்சபையின் மகிமைக்காக கடவுள் கொடுத்த கட்டளையை நிறைவேற்றினேன். கடவுள் பேரால் நான் இக் காரியத்தைச் செய்யாதே போனால், நாலு குதிரைகளைக் கட்டிநான்கண்ட துண்ட மாக்கப் படதயார்" என்றாள்.

"அருளாயி என்பவள் ஓர் மிருகம், அறிவு கெட்ட ஓர் பெண். மானங்கெட்ட ஓர் பெண். இவளோடு ராசாவென்று சொல்லப்படும் சார்ல்ஸ் என்பவன் ஓர் பதிதனும் பிரிவினைக்காரனுமாயிருக்கிறான். இவள் மூலமாக இவன் தன் இராச்சியத்தைக் கைப்பற்றப் பார்க்கிறான்," என்று மூன்றுமுறை அதே வார்த்தைகளை உரத்த சத்தமாக திருப்பித் திருப்பி ஓர் சாஸ்திரி பிரசங்கம் பண்ணினார். பிறகு "அருளாயி, உனக்குத்தான் சொல்லுகிறேன். உனது அரசன் ஓர் பதிதன்", என்று தன் கையினால் இவளைச் சுட்டிக் காண்பித்து இவர் சொன்னார்.

அதற்கு இவள் "ஐயா, இந்த அரசர் மகா பக்தியுள்ள ஓர் கிறீஸ்துவர். திருச்சபையை நேசிக்கிறவர். நீர் சொன்னபடியல்ல இவர். என் உயிருக்கே மோசம் வந்தாலும், இதைச் சத்தியமாகச் சொல்லுகிறேன்" என்றாள்.

இக் காரியத்துக்கு தெய்வம் என்னை அனுப்பவில்லையென்று நீசொல் என்று நீதிகர்த்தாக்கள் சொன்னபோது, "என்னை நெருப்பில் போட்டுக் கொளுத்தினாலும் அப்படி சொல்ல மாட்டேன்" என்றாள்.

பயங்கரமான, முகத்தை உடைய ஓர் கொலைக்காரனை யும் ஈட்டி, கத்தி முதலிய வதைசெய்யும் ஆயுதங்களையும் இவள்முன்பாக வைத்து, "கடவுள் பேரால்நான் வரவில்லை என்று சொல்" என்று நீதி கர்த்தாக்கள் பயமுறுத்தினார் கள். அப்போது இவள் " நான் கடவுளால் அனுப்பப் பட் டேன். அர்ச் மிக்கேல் சம்மனசு, அர்ச். கத்தரினாள், அர்ச். மர்கரித்தம்மாள் ஆக இம் மூவரும் அநேகவிசை எனக்குத் தரிசனம் கொடுத்தார்கள்" என்று முன்னையை விட இப் போது அதிக வீர சூரத்துடன் சொன்னாள்.

இப்படியே சுமார் ஐந்து மாத காலம் நியாயாதிபதி கள் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் அளித்தாள் இவள்.

இதைக் கண்டு ஆச்சரியப் படாதவன் ஒருவனுமில்லை. பத்தொன்பது வயதுள்ள ஓர் சிறு பெண், எழுத்து வாசக மறியாத ஓர் பெண், ஐரோப்பா கண்டத்திலே சகல சாஸ் திரங்களையும் கலைகளையும் தீரக் கற்ற மகா பெரிய சாஸ்திரி கள்யாவருக்கும் பதில் கொடுத்து, அவர்களை தோற்கடித் தாளென்று இவளை எங்கும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஆகையால் கத்தோலிக் திருச்சபையின் ஜென்ம சத் துருவாகிய வொல்தேர் என்பரே (Voltaire) இவளைப் பற்றி " இந்த சிரோமணி தன் நியாயாதிபதிகளுக்கு எவ் வளவு நேர்த்தியான பதில் கொடுத்தாளென்றால் அப்பதில் என்றும் அழியாத மகத்வமாயிருக்கிறது" என்றுசொல்லு கிறார்.(a)

(a) Essai sur les moeurs et l'esprit des nations. Chap. LXXX.

கடைசியாய் "அவளினும் வஞ்சகர் அவனியில் இல்லை" யென்பதாக நியாயாதிபதிகள் ஜான்தார்க்கின்பேரில் பன்னிரெண்டு அம்சங்களில் (12 Articles) பற்பல குற்றங்களைச் சாட்டி, இவளை நெருப்பில் போட்டுக் கொளுத்திச் சாகடிக்கும்படித் தீர்ப்பு சொன்னார்கள்.

இத்தீர்ப்பை இவள் கேட்டவுடனே எலும்பைத் துளைக்கும் வியாகுலம் இவளைப் பிடித்துக்கொண்டது. "பால் வடியும் முகம், பார்த்தாலும் போதும்" என்கிற பழமொழிக் கொப்பான இவளுடைய சுந்தர முகமானது வேறுபட்டுப்போயிற்று, "உள்ளத்தைக் கொள்ளைகொள் ளும் இக்கட்டழகியின்" வடிவு மாறிவிட்டது.

மாலைமாலையாய்க் கண்ணீர் விட்டு அழுகிறாள், "அன்னை அற்றேன் தந்தை அற்றேன். ஆதரையில் யாரு மற்றேன்" என்று புலம்புகிறாள்.

இப்படியாக சற்றுநேரம் ஜான்தார்க் அம்மாள் அழுதபிறகு, இது தெய்வசித்தமென்பதாக நன்றாய் உணர்ந்து, "கடவுளுக்குத் தான் முதல் ஊழியம்" என்னும் தன்னுடைய நீதி மொழிப்படியே நடக்கிறாள். பாவசங் கீர்த்தனம் பண்ணி நன்மைவாங்கினாள். சாவுக்கு முஸ்திப் பாயிருக்கிறாள்.

மறுநாள் அதாவது 1431-ம் வரு மே மீ 30-ம் உ புதன்கிழமை தேவ நற்கருணைத் திருநாளுக்கு முந்தின நாள் இவளைக் கொலைகளத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறார்கள். தேம்பிதேம்பி அழுதுகொண்டு, காலை 9 மணிக்கு சிறைச்சாலையை விட்டுப் புறப்படுகிறாள்.

சுமார் 600 இங்கிலீஷ் போர்வீரர்கள் தடிகளோடும் உருவின கத்திகளோடும் இவளைச் சூழ்ந்து வருகிறார்கள். ஏராள ஜனக்கூட்டம் சுமார் 10,000 பேர்கள் கூடவந்தார்கள்.

இவளுக்குப் பெண் உடுப்பு உடுத்தி, ஓர்வண்டியில் ஏற்றிச்சென்றார்கள். இப்படி போகும்போது, "ரூவன்பட்டணமே, ரூவன்பட்டணமே, இங்கேயோ நான் சாக வேண்டும்? இங்கேயோ என் கல்லறை?" என்று புலம்பிக்கொண்டு போனாள்.

கடைசியாக இப்பட்டணத்து பழைய சந்தைக்கடை என்னப்பட்ட இடத்துக்குக் (Vieux—Marche) கொண்டு போனார்கள்.

போகும் வழியில் லுவாஸ்லர் என்னப்பட்ட ஓர் நியாயாதிபதி தான்செய்தது குற்றமென்று உணர்ந்து, இவள் உட்கார்ந்திருந்த வண்டியிலேறி, இவளிடம் மன்னிப்புக் கேட்டார். இதைப் பார்த்த இங்கிலீஷ்காரர்களுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. வாரிக் பிரபு அவ்விடம் இல்லா விட்டால் உடனே அவரைக் கொலை செய்திருப்பார்கள். அவரோ தப்பி ஓடிப்போய்விட்டார்.

பழைய சந்தைக்கடை என்னும் இடத்துக்கு வந்தவுடன் எல்லாரும் பார்க்கும்படியாக கட்டப்பட்ட ஓர் உயர்ந்த மேடையில் இவளை ஏற்றினார்கள். "பதிதச்சி, மறுதலித்தவள், வேதத்தை மறுதலித்தவள், அஞ்ஞானி" என்னும் வாசகமுள்ள ஓர் சீட்டை எழுதி (Heretic, Relapsed, Apostate, Idolator), ஓர் முடி

அர்ச். ஜான்தார்க் வேதசாட்சி முடிபெறல்.

செய்து, அதில் இச்சீட்டை ஒட்டி, இவள் தலையில்வைத்தார்கள். பிறகு அங்கே நாட்டப்பட்ட கம்பத்தோடு இவளைச் சேர்த்து, சங்கிலியால் கட்டினார்கள்.

அப்போது இவள் "அர்ச்சியசிஷ்ட தமதிருத்துவமே என்பேரில் இரக்கமாயிரும்! சேசுவே என்னை இரட்சியும்! மரியாயே என்னை கைவிடாதேயும்! அர்ச். மிக்கேல் சம்மனசே, அர்ச். கத்தரினாளே, அர்ச். மர்கரித்தம்மாளே, என்பேரில் இரக்கமாயிரும்!" என்று மகா பக்தியாய் வேண்டிக்கொண்டாள்.

தனக்காக வேண்டிக்கொள்ளும்படி சுற்றியிருக்கிறவர்களைப் பார்த்துக் கேட்டாள்.

தன்னைக் கொலைசெய்தவர்களுக்காக கடவுளிடம் மன்னிப்புக்கேட்டாள்.

கடைசியாய் நியாயாதிபதிகள் கொலைக்காரனைப் பார்த்து, "உன்வேலையைச் செய்" என்று சொல்லவே, அவன் அடுக்கப்பட்ட விறகு கட்டையின்கீழ் நெருப்பு வைத்தான். புகைக்கிளம்பி, எங்கும் தீ பிடித்துக்கொண்டது. சுவாலையானது தன்னிடம் வந்தவுடனே, பொன்னைப் பழிக்கும் பூமலர்க் கொப்பான இந்த நவமணி தன்வாயைத்திறந்து, "சேசுவே, அர்ச். மிக்கேலே, நீர் என்னை மோசம்பண்ணவில்லை" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு தன் மாசற்ற ஆத்துமத்தைத் தன் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தாள்.

சுள்ளிவைக்கும் பர்வம், காய்காய்க்கும் காலமாகிய ஜான்தார்க்கின் 19-ம் வயதிலே இவளுக்கு நேரிட்ட இப் பயங்கரமான சாவைப் பார்த்து யார் அழாதிருக்கக்கூடும்?

வான மண்டலங்களைத் துளைக்கும் இவளுடைய ஆச்சரியமுள்ள வாய், ஆலிலைபோல் ஆடிக்கொண்டிருக்கும் இவளுடைய நாவு, குயிலைத் தோற்கடிக்கும் இவளுடைய மதுர குரலோசை, இளம் வாழைத் தண்டுகளுக்கொப் பான இவளுடைய கை கால்கள், சுற்றி முடிக்கும் கொண்டை, சூரியனைத் தோற்கடிக்கும் இவளது கூந்தல், ஜாதிலிங்கத்துக் கொப்பான இவளது மேனி, சிந்தைக் கினிய இவளது செந்தாமரை முகம் பாரத முழுவதும் காந்தி ஜோதி, மாலைப் பசுங் கிளியாகிய ஜான் தார்க் அம் மாள் சற்று நேரத்தில் சாம்பலாகி பக்கத்திலிருக்கப் பட்ட ஆற்றில் தூக்கி எறியப்பட்டாள்.

இக்காட்சியைப் பார்த்தால் கல்லும் கரையும் கல் தூணும் இற்று விழும் என்று சொல்லவேண்டுமோ?

ஆகையால் சுற்றிலுமுள்ள ஏராளமான ஜனங்களில் ஒருவனுவது கண்ணீர் விட்டு அழாதவன் இல்லை. "ஓர் அர்ச் சியசிஷ்டவளை இன்றைக்குக் கொன்றோம்" என்று சொல் லிக்கொண்டு, எல்லாரும் தங்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

சிற்சிலர் மாத்திரம் பரிகாசமாய்ப் பேச முயற்சி செய்தார்கள்.

ஓர் இங்கிலீஷ் போர் வீரன் ஜான் தார்க்கை தீயில் போட்டு கொளுத்தும் போது, ஓர் கொள்ளிக்கட்டைக் கொடுப்பதாக இவன் ஆணையிட்டு சத்தியம் செய்திருந் தான். அப்படியே இப்போது அக்கொள்ளிக்கட்டையைக் கொடுத்தான். ஆனால் இந்த மாதரசி கடைசி வேளையில் "சேசுவே" என்னும் நாமத்தை உச்சரித்தவுடனே, இவனுடைய மனம் பதைத்து அன்று சாயந்திரமே தான் செய்தது பெரிய பாதகம் என்பதாக மிகவும் மனஸ்தாபப் பட்டான்.

இவளுக்கு நெருப்புவைத்த கொலைக்காரன் அடுத்த நாள் சாயந்திரம் அர்ச். தொமினிக் சபை மடத்துக்கு வந்து "ஐயையோ ஓர் அர்ச்சியசிஷ்டவளைக் கொலைசெய் தேனே! தெய்வம் எனக்கும் பொறுத்தல் கொடுக்குமா?" என்று அவநம்பிக்கையோடு கதறி அழுதான்.

8-ம் அதிகாரம்

மறு விசாரணையில் (**Rehabilitation**) ஜான்தார்க் குற்றமற்றவளென்பதாகத்தீர்மானிக்கப்பட்டது. பிறகு அவ ளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அளிக்கப்பட்டது.

"பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொய்த்து
வைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமா
பராபரனே"

என்று தாயுமானவர் பாடிய பாட்டு ஜான்தார்க் அம்மாள்இறந்த சுமார் இருபது வருஷங்களுக்குப் பிறகு பூரணமாய் நிறைவேறிற்று.

இம்மாதரசிக்கு விரோதமாக எண்ணாத எண்ணமெல் லாம் எண்ணின நெஞ்சத்தோடு மார்புதட்டி, மல்லுக்கு நின்ற இங்கிலீஷ்காரர்களும் நியாயாதிபதிகளும் இவளுடைய பேரும் கீர்த்தியும் என்றும் போய்விட்டன வென்று பூரணமாய் எண்ணியிருந்தார்கள். எமனை வெல்லும் வல்ல மையைத் தாங்கள் கொண்டிருப்பதாக நினைத்தார்கள். (a)

(a) ஆனால் பெரியோர் யாவரும் பெருமாளா? பொய் மேல் கட்டிய இவர்கள் வேலை நிலைத்திருக்குமா?

"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்" என்னும் பழமொழி யாருக்குத் தெரியாது?

"கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்" என்னும் மகா அருமையான நீதி மொழியை எப்போதும் கைக் கொண்ட ஜான்தார்க்கின் தெய்வம் இவர்களைத் தண்டியா மல் விட்டு விடுமோ? "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" என்னும் பழமொழி வீண் போகுமா ?

இதைத்தான் இவ்வதிகாரத்தில் சொல்லப் போகி றேன். மகா அவமானமாய்க் கொலை செய்யப்பட்ட ஜான் தார்க் அம்மாள் பூரணமாய் வெற்றி அடைந்தாள்.

அதெப்படியென்றால்: 7-ம் சார்ல்ஸ் அரசன் ரூவன் பட்டணத்தை இங்கிலீஷ்காரரிடமிருந்து மீட்டு, அதைக் கைப்பற்றினவுடனே, சுமார் இருபது வருஷங்களுக்கு முன் அப் பட்டணத்திலேயே கொலை செய்யப் பட்ட ஜான்தார்க் அம்மாளை விசாரிக்கும்படி, அதாவது அவளைக் கொலை செய்தது பெரிய அக்கிரமமென்று தீர விசாரிக் கும்படி ஷை அரசனும் அவருடைய மந்திரிமார்களும் கூட்டத்தில் தீர்மானம் பண்ணினார்கள்.

ஷை ஜான்தார்க்கைப் பற்றி அக் காலத்தில் நியா யாதிபதிகள் செய்த பன்னிரண்டு அம்சங்களுள்ள தீர்மா னத்தைப் பற்றிய தஸ்தவேஜுகளை யெல்லாம் இங்கிலிஷ் காரர்கள் அங்கேயே விட்டு விட்டுத் தங்கள் தேசம் ஓடிப் போய்விட்டார்கள்.

இந்தத் தஸ்தவேஜுகளைக் கொண்டு இந்த மாது சிரோமணியைப் பற்றி மறு விசாரணை நடந்தது. (Rehabilitation)

இப்படி விசாரிக்கலா மென்பதாக ரோமாபுரி பாப்பு 3-ம் காலிக்ஸ்ட் என்பவர் 1455-ம் ஹு ஜூன் மீ 21-ம் உ கட்டளை கொடுத்தார்.

ஜான்தார்க் அம்மாளின் தாயாரும், இவளுடைய இரு சகோதரர்களும் இந்த மறுவிசாரணையில் வாதிகளாயிருந்து விவகாரத்தை நடத்தினார்கள். இவர்கள் கொடுத்த மனுவின் சுருக்க மென்னவென்றால்:

"ஜான்'தார்க் கம்மாள் பொய்ப்போதகத்தை வெறுத்தவள். உத்தம கிறீஸ்தவள். இவள் பேரிலே நியாயாதிபதிகள் அபாண்டமாய் பற்பல குற்றங்களைச் சாட்டி, கொலை செய்தார்கள். இவர்கள் செய்தது அநியாயம். ஜான் தார்க்கோ மாசற்றவள்" என்று சொல்லப்பட்டிருந்தது.

பரிஸ் பட்டணத்து தேவமாதா கோவிலில் (Notre Dame) நவம்பர் மீ 7-ம் உ முதல் விசாரணை நடந்தது. எல்லா நியாயாதிபதிகளும் தங்கள் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் போது, ஜான்தார்க்கின் தாயானவள் கருப்பு உடையை அணிந்து கொண்டு, இவர்களுக்கு முன்பாக முழங்காலிலிருந்து, கோ வென்று அலறி அழுது கொண்டு, தன்னுடைய மனுவையும் பாப்பானவரின் கட்டளையையும் சமர்ப்பித்தாள். இவளோடு கூட வந்த தன் குமாரர்களும், குருப்பிரசாதிகளும், அநேக கனவான்களும், ஆண்களும் பெண்களுமாக ஓர் பெரிய கூட்டம் கண்

ணீர் சிந்தி அழுதுகொண்டு, நியாயாதிபதிகளுக்கு முன் பாக நின்றார்கள்.

நியாயாதிபதிகள் ஜான்தார்க்கின் தாயாரைத் தூக்கி எழுப்பி, ஆறுதல் சொன்னார்கள்.

ஆனால் இவளோடு வந்தவர்கள் எவ்வளவு சத்தமிட்டு அழுதார்களென்றால் அந்த இடத்தில் விசாரிக்க முடியாமல் பக்கத்திலுள்ள சக்கிரிஸ்தியில் விசாரிக்க வேண்டியதாயிருந்தது.

நியாயாதிபதிகள் "இது மகா கஷ்டமான விசாரணை. இதை முடிக்க வெகு நாள் செல்லும்" என்றார்கள்.

ஏராளமான சாட்சிகள் வந்து, ஜான்தார்க் பாரிசமாய் மகா உற்சாகத்தோடு சொன்னார்கள்.

ஜான் தார்க் பிறந்த தோன்ரெமி ஊரிலுள்ள சாதாரண ஜனங்கள், இவள் சிறு வயதாயிருக்கும் போது இவளைப் பார்த்தவர்கள், இவளோடு கூடி விளையாடின சிறுவர்கள், இவளுடைய ஆத்தும குரு, இவளுடைய குதிரை வீரன் (Squire), இவளுடைய பாதுகாப்புக்கு வைக்கப்பட்ட போர் வீரர்கள் (Knights), இவளுக்கு ராணுவ உடுப்பை உடுத்தி போர் ஆயுதங்களைத் தரிப்பித்துத் திரும்பி இவைகளைக் கழற்றினவர்கள், இவளுடைய காயங்களைக் கட்டி சௌக்கியப் படுத்தினவர்கள், இவளுடையபட்டாளத்தில் சேவித்த போர் வீரர்கள், அரசனுடையமந்திரிகள், ஆர்லியன்ஸ் பட்டணத்து சாதாரணஜனங்களும் தனவான்களும், பிரக்யாதிபெற்ற தளகர்த்தர்களாகிய

துனுவா, டிலான்ஸோ என்பவர்கள் ஆக இவர்கள் யாவரும் ஜான் தார்க்குக்கு சனுவாகத் தனியாயும் கும்பல் கும்பலாயும் வெகு வாஞ்சையோடு சாட்சிசொல்ல வந்தார்கள். சுமார் 170 சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். இதை முடிக்க சுமார் ஆறு மாதங்கள் சென்றன.

கடைசி விசாரணை ரூவன் பட்டணத்தில்தான் நடந்தது. ஜான்தார்க் நிந்தை அடைந்த இடத்திலே நிந்தைப் பரிகாரமும் நடந்தது.

நியாயாதிபதிகளின் தலைவராகிய ஜுவெனெல் என்பவர் (Juvenel des Ursins) ஜான் தார்க்கின் குடும்பத்துக்கு முன்பாகவும், அக் குடும்பத்தின் வக்கீல்களுக்கு முன்பாகவும் இன்னுமற்றவர்களுக்கு முன்பாகவும் நீதிஸ்தலத்தின் தீர்ப்பைப்பிரசித்தம் செய்தார்.

அதின் சாரமென்னவென்றால் "இந்த நீதிஸ்தலத்திலுள்ள நாங்கள் கடவுளுக்கு முன்பாகச் சொல்வதென்னவென்றால்: ஜான் தார்க்கைப் பற்றிய முதல் தீர்ப்பு அவதூறுள்ளதென்றும், அநியாயமென்றும், ஒன்றுக்கொன்று ஒவ்வாதகாரியங்கள் அதில் அடங்கி யிருக்கிறதென்றும், அவளை தீயிட்டுக் கொளுத்தினது அநியாயமென்றும், ஆகையால் முந்தின தீர்ப்பைப் பற்றிய காரியங்கள் யாவும் பிசகு என்பதாக (Nul) த்தீர்ப்பு செய்கிறோம். ஆகையால் இவளுடைய குடும்பமும் யாதொரு அபகீர்த்தி அடையக் கூடாதென்றும் நாங்கள் அதிகாரத்தோடு இத் தீர்ப்பு செய்கிறோம்.

இதுவுமல்லாமல் நாங்கள் செய்த இந்தத் தீர்ப்பை இப் பட்டணத்தில் இரண்டு இடங்களில் மகா ஆடம்பரத் தோடு பிரசித்தம் செய்ய வேண்டியது. அதெப்படி யென்றால்: செந்த் உவேன் என்னப்பட்ட இந்த இடத் திலே (St Ouen) ஜான் தார்க் அம்மணியைப்பற்றி சுற்றுப்பிரகாரமும், ஓர் பிரசங்கமும் நடத்த வேண்டியது. நாளைக்கு இவளைக் கொலை செய்த பழைய சந்தையிடத்தில் ஓர் சுற்றுப்பிரகாரம் செய்து, எப்போதும் ஞாபகப் படுத்த அதே இடத்திலே ஓர் உயர்ந்த சிலுவையை நாட்டுகிறது'' என்று தீர்ப்பு செய்யப்பட்டது.

அப்படியே இவ்விரண்டும் நிறைவேறின.

இச்செய்தி வெகுசீக்கிரம் தேச மெங்கும் பரவிற்று.

ஆர்லியன்ஸ் பட்டணத்தில் இவளைப்பற்றி பெரிய கொண்டாட்டம் நடந்தது. இதை ரோமாபுரி பாப்பு வுக்கும் அறிவித்தார்கள்.

அரசன் ஷி விசாரணைச் செலவுக்கு வேண்டியவை களைக் கொடுத்ததல்லாமல் இதை நடத்தின நியாயாதி பதிகளுக்கும் தக்க வெகுமதி அளித்தார்.

ஜான்தார்க் அம்மாள் கடவுளால் அனுப்பப்பட்ட வளென்று பிராஞ்சு, இங்கிலாந்து, பர்கண்டியிலுள்ள, ஜனங்களும், ரோமாபுரி பாப்புகளும், திருச்சபையும் நாகரீக முள்ளவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

கடைசியாய் இவள் மூலமாக அனேக புதுமைகள் நடந்த படியால் சென்ற நூற்றுண்டிலே 10-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் இவளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அளித்தார்.

மெய்யாகவே "இறந்தும் இறவா மியல்பினர் இவரே" என்னும் பொன் மொழிகள் ஜான் தார்க்கிடம் நிறைவேறிற்றென்று யார்தான் சொல்லார்?

முடிவுரை.

ஜான்தார்க் அம்மாளின் சரித்திரத்தை முடித்து விட்டேன்.

இச் சிரோமணியிடத்தில் விளங்கின மகா அதிசய குணங்களில் சிலவற்றை இப்போது சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

1 13 வயது துவக்கி 19 வயதுவரையில் அதாவது ஏழு வருஷ காலமாக ஏறக்குறைய நாள்தோறும் இவள் கடவுளோடு வாசஞ் செய்தாள்.

கடவுளோடு வாசஞ் செய்வதைவிட உலகத்தில் அதிசயம் உண்டோ?

2 பட்டிக்காட்டில் பிறந்து, கொட்டை நூற்கும் வேலையைத்தவிர வேறே வேலை தெரியாத ஓர் சிறுபெண் வில்லாதி வில்லன் விலைமதியா பாண்டியனாகிய இங்கிலீஷ் அரசனுக்கும் அவனுடைய வல்லமையுள்ள தளகர்த்தர்களுக்கும் சண்டையைப் பற்றி மகா வீர சூர முள்ளதும் திடாரிக்கமுள்ளதுமான ஓர் கடிதம் எழுதி அனுப்பினாள்.

இதைப் போலொத்தது உலகத்தில் உண்டோ?

3 மகா முரட்டுத்தனமும், மிருகத் தன்மையுமுள்ள பட்டாளத்துப் போர் வீரர்களுக்கு நடுவே சுமார் இரண்டு வருஷ காலமாக இவ் விளவயதுள்ள மாது தன் தூய்மையையும் மாசற்ற தனத்தையும் காப்பாற்றினாள். இது ஓர் மகா புதுமையல்லவோ? பஞ்சும் நெருப்பும் சற்றுநேரமாவது பக்கத்திலிருக்க முடியுமோ?

4 எழுத்தறிவில்லாத ஓர் பட்டிக்காட்டு சிறுபெண் ஓர் க்ஷணத்திலே ஓர் பெரிய சேனையை நடத்தும் தளகர்த்தனுனள்.

கருப்புநாய் வெள்ளைநாய் ஆகுமா?

5 எட்டு மாதமாய் இங்கிலீஷ்காரரால் முற்றுகை போடப் பட்ட ஆர்லியன்ஸ் பட்டணத்தை இவள் எட்டேநாளில் மீட்டாள்.

நாயைப் பிடித்த முயலை யாராவது பார்த்ததுண்டா?

6 தன் தேசத்தை விட்டு ஓடிப்போக நினைத்துக் கொண்டிருந்த 7-ம் சார்ல்ஸ் அரசனுக்கு சுமார் 3 மாதத்தில் மகா ஆடம்பரத்துடன் இவள் முடி சூட்டினுள்.

மண்ணை பொன்னுக்க முடியுமா?

7 குதிரை ஏறத் தெரியாதவளும், எந்த யுத்த ஆயுதத்தைப் பிடிக்கத் தெரியாதவளுமான ஓர் சிறு பெண் ஏராளமான இங்கிலீஷ் பட்டாளங்களை நடுநடுங்கச் செய்து, தேசத்துக்கப்பால் துரத்தினுள்.

மகா கீர்த்திபெற்ற அலெக்சாந்தர், சீசேர், நப்போலியன் முதலிய இராட்சத வீரர்கள் முதலாய் இப்படிச் செய்தார்களா?

8 ரூவன்பட்டணத்திலே கூடிய ஏராளமான பெரிய சாஸ்திரிகள் ஐந்து மாதமாய்க் கேட்ட மகா சிக்கலான

கேள்விகளுக்கு அ, ஆ, இ, ஈ, என்னும் அக்ஷர முதலாய் அறியாத இச் சிறு பெண் தக்க பதில் அளித்து, அவர்களைத் தோற்கடித்தாள்.

சாக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டல் முதலிய ராட்சத சாஸ்திரிகளிடம் இவள் தன் வித்தையைக் கற்ருளா?

9 "கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்" என்னும் நீதி முறைப்படி இவள் நடந்ததல்லாமல், இதற்காக தன் உயிரையும் கொடுத்தாள்.

இதைவிட மேலான வீரியம் உலகத்தில் உண்டோ?

10 கடைசியாக இவள் அனேக புதுமைகளைச் செய்ததுமல்லாமல் தீர்க்கதரிசனங்களையும் சொன்ஞள்.

இவ்வித புதுமைகளும் தீர்க்கதரிசனங்களும் புறமதத்திலே உண்டா?

ஆகையால் இவ்வாச்சரியங்களை வாசிக்கிறவனுக்கு வானத்தையும் பூமியையும் சுருட்டிப் பிடிப்பதுபோல், ஓர் மன எழுச்சி அவனை அறியாமலே உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இம் மன எழுச்சி யென்னவென்ருல்: பூலோக வெறுப்பும் பரலோக ஆசையுந்தான்.

ஆகையால்: "தந்தை தாய் நிஜமுமல்ல, ஜனங்களும் நிஜமுமல்ல, மைந்தரும் நிஜமுமல்ல, மனைவியும் நிஜமுமல்ல, இந்த மெய் நிஜமுமல்ல, இல்லறம் நிஜமுமல்ல, சுந்தர ராஜதேவ துணையடி நிஜம்பார் நெஞ்சே"

என்று ஓர் இந்து கவிராயரோடு நாம் பாட வேண்டும்.

அல்லாமலும் இவ்வளவு அதிசயங்கள் அடங்கிய சரித்திரம் புறமதத்திலே கிடையவே கிடையா தென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

ஆனால் சிலர்: ராமாயணம், மகாபாரதம் முதலிய காவியங்களில் ராமன், சீதை, துரோபதை முதலியவர்களின் சிறந்த சரித்திரங்கள் இல்லையோ என்று கேட்பார்கள்.

ஆனால் ஜான்தார்க்கின் சரித்திரத்துக்கும் ஷை இந்து மதத்தார்களின் சரித்திரத்துக்கும் வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாச முண்டென்று புத்திசாலிகள் யாவரும் ஒரே வாய் மொழியாய்ச் சொல்வார்கள். அதெப்படியென்றால்: ஷை இந்துமத காவியங்களெல்லாம் சரித்திர பிரமாணங்களுக்கு ஒத்து வராததால் அவைகள் யாவும் கட்டுக் கதை யென்பதாய் படித்தோர் யாவரும் சொல்வார்கள். ஜான்தார்க்கின் சரித்திரமோ மெய்யான சரித்திரம். அதாவது இதிலுள்ள வர்த்தமானங்களில் ஒவ்வொன்றும் இந்த வருஷத்திலே, இந்த மாதத்திலே, இந்த தேதியிலே, இந்த இடத்திலே நடந்த தென்று மகா

திட்டமாயும் மிக நுணுநுணுக்கமாயும் பூரணமாய் எண்பிக்கலாம்.

ஆகையால்:

"கர்ப்பூரம் போல கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியர் ஆவாரோ புகல்."

என்று நீதி வெண்பாவில் சொல்லியபடி இவ்விருவித சரித்திரங்களுக்கும் பார தூர வித்தியாசம் உண்டென்று யார் அறியார்?

அகண்ட அம்பரத்தை ஆட்டிவைத்த ஜான்தார்க் என்னும் இச் சிறு பெண் ரூவன்பட்டணத்து விறகு கட்டை மேடையிலிருந்து நம்மில் ஒவ்வொருவருக்கும் உரத்த சத்தமாய்க் கற்றுக் கொடுக்கும் மேலான பாடத்தைச் சற்றுக்கேள்.

நாஸ்திகனே! தெய்வம் இல்லையென்கிறாயே; நான் ஏழுவருஷ காலமாக தெய்வத்தோடுபேசி, அவரோடு சஞ்சாரம் செய்தது உனக்குத் தெரியாதோ?

சுயமரியாதைக்காரா! சகல மனிதர்களையும், அவர்களிடம் விளங்குகிற சன்மார்க்க முறைகளையும் அவமானப் படுத்தி, உலகமெங்கும் கலகம் செய்கிறாயே; சன்மார்க்கத்துக்கும் சத்தியத்துக்கும் என் காலமெல்லாம் நான் உழைத்தது உனக்குத் தெரியாதோ?

அவிசுவாசியே! கடவுள் ஏற்படுத்திய கத்தோலிக் திருச்சபையையும் அதன் போதகங்களையும் எப்போதும் பரிகாசம் பண்ணுகிறாயே; அவைகளை நான் எப்போதும் நுணுநுணுக்கமாய் அனுசரித்தேனென்று நீ அறியாயோ?

கெட்ட கிறீஸ்தவனே! பரலோகத்தை நாடாமல் பூலோகத்தையே நாடிக் கொண்டிருக்கிறாயே, "கடவுளுக் குத்தான் முதல் ஊழியம்" என்கிற நீதிநூலை நான் என் றும் அனுசரித்தேனென்றும், அதற்காக என்உயிரையும் கொடுத்தேனென்றும் உனக்குத்தெரியாதோ?

இவ்வாறு நம்மில் ஒவ்வொருவனுக்கும் ஜான்தார்க் அம்மாள் சொல்லுகிற புத்திமதிகளைக்கேட்டு, நல்ல வழியில் நடப்போமாக!

கடைசியாய் இவ்வளவு பெரிய இராக்ஷத அம்மணியின் ஜென்ம தேசமாகிய பிரான்சு தேசத்தைப்பற்றி சிலவார்த் தைகளை சொல்லி சரித்திரத்தை முடிக்கிறேன்.

"திருச்சபை மூத்த குமாரத்தி" என்னும் மகாகெம் பீரமான கௌரவப்பட்டத்தைப் பெற்ற பிரான்சு தேசமே, வாழ்க!

உனது முதல் கிறிஸ்தவ அரசர் குளோவிஸ் காலந் துவக்கி இதுவரையில் அதாவது பதினைந்து நூற்றாண்டுக ளாக நீ திருச்சபைக்குச் செய்த எண்ணிறந்த ஊழியங்களை ப்பார்த்தால், நீ பெற்றுக் கொண்ட ஷை பட்டத்தை பிறர் அபகரிக்காதபடி இதுவரையில் அதைக்காப்பாற்றிக் கொண்டு வருகிறாயென்று நாங்கள் உணருகிறோம்.

ஏனென்றால் எல்லா வீரத்துவத்திலும் (chivalry), சிலுவை சண்டைகளிலும்(Crusades), கல்வி கலைக்கியானங்களிலும்(scholasticism) நீ முதன்மை பெற்றிருக்கிறாய்.(a)

புதுமைகள் நடக்கும் திருஸ்தலங்களைப் பார்த்தாலும் கடவுள் உனக்குத்தான் முதல் இடம் கொடுத்திருக்கிறார்.

கடைசியாய் உன்தேசத்துக் காபந்து விஷயத்தைப் பார்த்தாலும், உலகத்தில் எங்கும் கேள்விப்படாத ஓர் மகா புதுமையால் ஜான்தார்க் அம்மாள் மூலமாய் கடவுள் தானே முன்னின்று, உன்சத்துருக்களை வெளியே துரத்தி, உன்னைக் காப்பாற்றியிருக்கிறார்.

ஆகையால் "திருச்சபையின் மூத்தகுமாரத்தி" என்னும் சிறந்த பட்டம் உன்னிடம் என்றும் நிலைத்திருக்க வேண்டுமானால், "கடவுளுக்குத்தான் முதல் ஊழியம்" என்னும் ஜான்தார்க்கின் மூதுரையை மறவாதே.

அப்படி செய்வாயானால் அக்காலத்தில் கடவுள்தாமே உன்னிடம் வந்து, உன்சத்துராதிகளிடத்திலிருந்து உன்னைக் காப்பாற்றினதுபோல, இக்காலத்திலும் உன்னைச் சுற்றியிருக்கும் ஏராளமான சத்துராதிகளிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவார் என்பது நிச்சயம்.

பிரான்சு தேசமே, இவ்வார்த்தைகளை உனக்கு மாத்திரமல்ல உன்னைச் சேர்ந்த பிறதேசங்களுக்கும் (Colonies) சொல்லுகிறேன்.

(a)இதை நான் எழுதிய "ஓர் மகா அதிசய காட்சி" என்னும் புஸ்தகத்தில் எண்பித்திருக்கிறேன். 101ம் பக்கம் பார்க்க.

இவ்வார்த்தைகளை எழுதுகின்ற நான் உனக்குஅன்னியனுயிருந்தாலும் (Non-French) உன் தேசத்து இராஹத ஜான் தார்க்கின் மாதிரிகையை நீ பின்பற்ற வேண்டுமென்று மகா ஊக்கத்துடன் சொல்லுகிறேன்.

முற்றிற்று

9. ஏட்டிக்குப்போட்டி அல்லது புரோட்டஸ்டாண்டானுக்கும் கத்தோலிக்கனுக்கும் சண்டை ... ... 0—2—0

10. வேதங்களை உண்டாக்கியவர்களைப் பரிசோதித்தல் ... ... 0-10—0

11. நியூமன் தெரசம்மாள் சரித்திரம் ... 0—3—0

12. புரோட்டெஸ்டாண்டாரோடு நடந்த நான்கு பெரிய தர்க்கங்கள் ... ... 0—2—6

13. சுயமரியாதைக்காரா, சாவுமணி உனக்கா, எனக்கா? ... ... 0—3—0

14. ஜான்தார்க் என்பவளின் மகா அதிசய சரித்திரம் ... ... 0—4—0

கவனிப்பு

எதிரியைக்கொண்டே எதிரியை வெல்லவேண்டும் என்கிற சுலோகச் சொல் (*a*) மிக அருமையான கொள்கையென்றும், ஒருவன் கையில் அது மகா வல்லமையுள்ள ஆயுதமாயிருக்கிறதென்றும், முக்கியமாய் தர்க்க விஷயத்தில் அதைவிட வல்லமையுள்ளது கிடையாதென்றும் யாவரும் அறிவார்கள். இவ்வித ஆயுதத்தைத்தான் நான் இயற்றிய புஸ்தகங்கள் யாவற்றிலும் தெளிவாகவும், பூரணமாகவும் எதிரிகள் தாக்கவொண்ணாத விதமாயும் யாவரும் கண்டுபிடிக்கும் படியான சாதாரண நடையில் சம்பாஷணை வண்ணமாய் புரோட்டெஸ்டாண்டாருக்கு விரோதமாகப் பிரயோகித்திருக்கிறேன். ஆகையால் பள்ளிக்கூடம், புஸ்தகசாலை, மடம் முதலிய இடங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் கூட அப்புஸ்தகங்கள் மகா அவசியமென்பதை நான் சொல்லத் தேவையில்லை.

11-வது 14-வது லெக்கமிட்ட புஸ்தகங்கள் சரித்திர புஸ்தகங்கள். மற்றவை தர்க்க புஸ்தகங்கள்.

4-வது லெக்கமிட்ட புஸ்தகத்தை திருச்சி, கண்டோண்மெண்ட், செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரசிலும்,

12-வது 13-வது 14-வது லெக்கமிட்டதை கும்பகோணம் மாதாகோவில் அச்சுக்கூடத்திலும்,

மற்ற புஸ்தகங்கள் யாவற்றையும் புதுச்சேரி மாதாகோவில் அச்சுக்கூடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

(*a*) "Ex ore tuo te judico." Lucas 19, 22.